ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்து ஹு பங்குனிமீ 2உ 15—3—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலவ்வல்மீ 3உ திங்கட்கிழமை. } இதழ் 8.

பாதுகாப்பு கவுன்ஸிலும் காஷ்மீர் பிரச்னையும்

—:o.—

5-வது 7-வது இதழ்களில் காஷ்மீர் பிரச்னையின் அரசியல் ராஜீய நுணுக்கங்கள் விளக்கப்பட்டன. அதன் சரித்திர, பூகோள அம்சங்களை இவ்விதழில் தெளிவாக்குவோம். குறிப்பாக ஜனவரி 6-லிருந்து பிப்ரவரி 15-வரை பாதுகாப்பு கவுன்ஸிலில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாஸ்துகள், தஸ்தாவேஜுகள், ஆலோஜனைகளை தேதிவாரியாக குறிப்பிடவிரும்புகிறோம்.

இந்தியாவின் புகார் பாகிஸ்தானுக்கு எதிராக இருப்பினும், சர்வதேசீய அரசியல் மூலைமுடுக்குகளை துருவிப்பார்த்தால் காஷ்மீர் பிரச்னை உலகப் பிரச்னையாக கருதப்படுவது விளங்கும். உலக நாடுகள் காஷ்மீர் பிரச்னையுடன் கொண்டிருக்கும் அக்கரை மூன்றுவது யுத்தத்திற்கு முன் மாறமுடியாது. அதற்கு காஷ்மீரின் பூகோள அமைப்பே காரணம். எனவே, ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் காஷ்மீர் பிரச்னையில் தலையிடாமல் இருக்குமென எதிர்பார்ப்பது சாத்தியமில்லை.

பூகோள அமைப்பின் முக்கியத்துவம்,

வரப்போகும் யுத்தத்தில் பிரிட்டன், அமெரிக்காவின் ராணுவ தளமாக அமையும் அந்தஸ்து காஷ்மீருக்கு உண்டு. அதன் எல்லைகளுடன் ஆறு தேசங்களான, சைனு, ரஷ்யா, ஆப்கனிஸ்தானம், பாகிஸ்தான், இந்தியா, தீபெத்தின் எல்லைகள் சந்திக்கின்றன.

காஷ்மீரின் 1,000 மைல் நீள சர்வதேச எல்லையில் சைனுவின் முஸ்லிம் மெஜாரிடி மாகாணமான செங்கியாங்கிலிருந்து புல்திஸ்தான், கில்கிட்வரை 450 மைல், கில்கிட் பகுதியில் ரஷ்யாவுடன் சில மைல்கள், சுதந்திர எல்லைப்புற சுவாத்புனேர், கில்கிட்டையடுத்து ஆப்கனுடன் 75 மைல், இந்தியாவுடன் 250 மைல், பாகிஸ்தானுடன் 350 மைல், திபெத்துடன் 350 மைல்களும் சேர்ந்திருக்கின்றன.

நிர்வாக நாகரீக அடிப்படையில் ஆறு பிரதேசங்கள் காஷ்மீரில் அடங்கியுள்ளன. முதலாவது பாராமுலா, அனந்தநாக், ஸ்ரீநகர் ஜில்லாக்கள் அடங்கிய முக்கியமான காஷ்மீரப் பள்ளத்தாக்கு. இதில் 70,000 காஷ்மீர் பண்டிதர்களும், 1,30,000 முஸ்லிம்களும் இருக்கின்றனர்.

இரண்டாவது கட்டோவா, அவ்தம்பூர், ரியாஸி, ஜம்மு ஜில்லாக்களைக்கொண்ட ஜம்மு பிரதேசம். இங்கு டோகராக்கள் அதிகமாக இருப்பினும் முஸ்லிம்களைவிட குறைவுதான்.

மூன்றாவது முஸபராபாத், பூஞ்ச், மீர்ப்பூர் ஜில்லாக்களைக்கொண்டது. ராவல்பிண்டி, ஜீலம் ஜில்லாக்களை ஒட்டியிருக்கும். இங்கு 8 லக்ஷம் முஸ்லிம்களும், ஒரு லக்ஷம் ஹிந்துக்களும் இருக்கின்றனர். இதன் விஸ்தீரணம் 5,000 சதுர மைல்.

நான்காவது கில்கிட். அதன் விஸ்தீரணம் 17,797 சதுர மைல். ஜனத்தொகை 1,16,057 இப்பிரதேசம் சர்வ தேசிய முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. கில்கிட் ஏஜென்ஸியில் லஹூந்தா, நாகர், பம்பால், அஷ்கோமா, யாஸீன், சீலாஸ், ஹூன்ஸா சமஸ்தானங்கள் அடங்கிருக்கின்றன. கில்கிட் ஜில்லாவின் விஸ்தீரணம் 3,119 சதுர மைல். ஜனத்தொகை 39,531. அதைச் சேர்ந்த சமஸ்தானங்

களின் விஸ்தீரணம் 14,679. ஜனத்தொகை 76,526 இந்த சமஸ்தானங்களில் நாகர், யாஸீன், ஹ்ன்ஸா மூன்றும் பாகிஸ்தானுடன் ஐக்கியமாய் விட்டதாக அறிவித்திருக்கின்றன.

ஐந்தாவது புல்திஸ்தான். அதன் விஸ்தீரணம் 14,000 சதுரமைல். ஜனத்தொகை 15,068 பெரும் பான்மையோர் பிரதேச முஸ்லிம்கள்.

ஆறுவது லதாக். இங்கு பெரும்பான்மையோர் பௌத்தர்கள் கலாச்சாரத்துறையில் திபெத்துடன் அதிகத் துடர்பு இவர்களுக்கு உண்டு. கடந்த 100 வருஷங்களாக அவர்கள் டோக்ராராஜ் அக்ரமத்தின் கீழ் வாழ்கின்றனர்.

82,258 சதுர மைல் விஸ்தீரணமுள்ள காஷ்மீர் இந்தியாவிலேயே மிகப் பெரிய சமஸ்தானமாகிய ஹைதராபாத்தைவிட 55 சதுரமைல் விஸ்தீரணத்தில் குறைவாக இருப்பினும் மற்றவைகளைக்காட்டிலும் பிற்போக்குள்ள சமஸ்தானமாகும். இது காஷ்மீரின் கடந்த காலம்.

இன்று காஷ்மீரின் எதிர்காலம் பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா, பாகிஸ்தான் இதர வல்லரசுகளிடையே சர்ச்சையில் இருந்து வருகின்றது. சில அம்சங்கள் வெளிப்படையாகவும் சில விஷயங்கள் புதிராகவும் இருக்கின்றன. சரியான முடிவு, பலத்தைக் கொண்டே, செய்யப்படும். இந்தியா வெளிப்படையாகவும் பாகிஸ்தான் மறைமுகமாகவும் பலப்பரீக்ஷையில் இறங்கியிருக்கின்றன. உலகத்தின் இதர நாடுகள் எந்தெந்த வகைகளில் தங்கள் செல்வாக்கையும் பலத்தையும் உபயோகிக்கின்றன என்பதை இனிதான் பார்க்கவேண்டும். புகார் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு காஷ்மீர் பிரச்னையில் தலையிட பாதுகாப்பு கவுன்ஸில் உரிமை பெற்றுவிட்டது. பாகிஸ்தான் விரும்பும் வரையிலும் காஷ்மீரில் அந்த நாடுகளுக்கு அக்கரை இருக்கும் வரையிலும் அந்த உரிமை இருந்துக் கொண்டே இருக்கும்.

எனவே காஷ்மீர் இந்தியா பாகிஸ்தான் பிரச்னை மட்டுமல்ல. சர்வதேச பிரச்னை என்பது தெளிவு.

இந்தியா 35-வது விதியின் கீழ் புகார் சமர்ப்பித்தது. ஜனவரி 6-ந்தேதி பாதுகாப்பு கவுன்ஸிலின் ஆரம்பக்கூட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் தூதர்கள் வக்காலத்துக் கடமையை நிறைவேற்றி வைத்தனர். ஜனவரி 15-ந்தேதி பாகிஸ்தான் வெளிநாட்டு இலாகா மந்திரி சௌத்ரி முகம்மது ஜபருல்லாகான் ஆஜராயிருக்கும்போது இந்தியப்பிரதிநிதி கோஷ்டி தலைவர் மிஸ்டர் கோபால்சாமி அய்யங்கார் சட்டபூர்வமாக புகார் தாக்கல் செய்தார். அப்பொழுது அவர் சட்டம், ஒழுக்கம் சம்மந்தமான பொறுப்புக்களை அடிப்படையாகக்கொண்டு மூன்று விஷயங்களுக்காக இந்தப் புகார் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

1. படையெடுப்பாளர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் உதவி செய்வதை கவுன்ஸில் தடுக்க வேண்டும்.

2. பாகிஸ்தானிகள் ஆக்ரமிப்பாளர்களுக்கு உதவி செய்யாமல் தடுக்கப்படவேண்டும்.

3. ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களின் மீதுள்ள ஆதிக்கம் ஆமோதிக்கப்படக்கூடாது என்று கோரினர்.

படையெடுப்பாளர்கள் வெளியேற்றப்பட்டு உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் கோரிக்கை. அதற்கு "காஷ்மீர் புகார்" என்று இந்தியா தலைப்பு கொடுத்திருந்தது. ஆனல் ஸர் ஜபருல்லா ஜனவரி 15ந்தேதி நியூயார்க்பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் காஷ்மீரப் பிரச்னை இதரபிரச்னைகளில் ஒன்று வென்றும் அப்பிரச்னைகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டு இருக்கின்றன என்றும் கூறினர். ஜனவரி 15-ல் சௌத்ரி ஜபருல்லா ஒன்றும் பேசாமல் மூன்று தஸ்தாவேஜுகளை மட்டிலும் கௌன்ஸிலில் சமர்ப்பித்தார்.

பாகிஸ்தான் தஸ்தாவேஜுகள்

முதல் தஸ்தாவேஜு விஷயங்கள்:—

(அ) இரண்டு நாடுகளிலும் நேசபாவமான உறவு நிலைக்க வேண்டும்.

(ஆ) மலை ஜாதியினரை எதிர்த்து பாகிஸ்தான் யுத்தம் செய்யவில்லை என்றாலும் அவர்களுடைய உறுதியைக் தலைப்பதில் எவ்வித தயக்கமும் காட்டவில்லை. அதனல் தேசத்தில் பெரும் அளவு எதிர்ப்பு தோன்றி உள்நாட்டு குழப்பத்தின் அபாயம் ஏற்பட்டும்கூட அரசாங்கம் தன்னுடைய கொள்கையை கடைப்பிடித்து நடந்திருக்கிறது.

(இ) பாகிஸ்தான் படையெடுப்பாளருக்கு உதவியோ, யுத்த தளவாடங்கள் கொடுத்தோ, பயிற்சி அளித்தோ, அல்லது தலைமை தாங்கியோ வருகின்றது என்று சொல்லப்படுவது முற்றிலும் தவறாகும்.

இரண்டாவது தஸ்தாவேஜில் இந்தியாவுக்கு எதிராக அடியில்கண்ட புகார்கள் அடங்கியிருந்தன.

(அ) இந்தியா பிரிவினையை செயலளவில் ஏற்கவில்லை. பிரிவினைக்கு எதிராக இந்தியா பல காரியங்களில் முனைந்திருக்கிறது.

(ஆ) திட்டப்படி இந்தியாவில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

(இ) இந்திய முஸ்லிம்களின் வாழ்க்கை, நலன், மதம், கலாச்சாரம், பாஷைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

(ஈ) ஜுனகட் முதலிய பாகிஸ்தான் சமஸ்தானங்களை சட்டத்திற்கு புறம்பாக ஆக்ரமித்து இந்திய ராணுவம் அங்குள்ள முஸ்லிம்களை அழித்திருக்கிறது.

(உ) மோசடியாக இந்தியாவுடன் சேர்க்கப்பட்ட பிறகு இந்திய ராணுவத்தால் ஏற்பட்ட காஷ்மீர் முஸ்லிம்களின் கொலையும், அழிவும்.

(ஊ) பாகிஸ்தான்மீது இந்திய விமானத் தாக்குதல்.

(எ) பிரிவினை ஒப்பந்தப்படி 55 கோடி ரூபாயும் ராணுவ தளவாடங்களும் பாகிஸ்தானுக்கு கொடுக்காமல் இந்தியா ஒப்பந்தத்தை மீறிவிட்டது.

(ஏ) பாகிஸ்தான் பொருளாதாரத்தை ரிஸர்வ் பாங்க் மீது இந்திய நிர்ப்பந்தம்.

(ஐ) பாகிஸ்தான்மீது நேரடி தாக்குதல் நடத்தப்படுமென்ற பயமுறுத்தல்.

(ஒ) பாகிஸ்தானை தகர்த்து உருக்குலைத்துவிட இந்தியா விரும்புகின்றது.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு பரிகாரம் செய்யும்படி கவுன்ஸில் இந்தியாவை நிர்பந்திக்க வேண்டுமென பாகிஸ்தான் கேட்டுக்கொண்டது.

மூன்றுவது தஸ்தவேஜில் ஜம்மு, காஷ்மீர் பற்றி அடிப்படை ஆலோஜனைகள் அடங்கியுள்ளன.

(அ) ஜம்மு, காஷ்மீரில் இந்திய சர்க்கார் யுத்தத்தை நிறுத்த வேண்டும்.

(ஆ) இந்திய ராணுவத்தினர் உள்பட வெளியார்கள் அவர்கள் பாகிஸ்தானிகளாக இருப்பினும் சரி, இந்தியர்களாக இருப்பினும் சரி வெளியேற்றப்பட வேண்டும்.

(இ) வெளியேறிய காஷ்மீர் முஸ்லிம்களை மீண்டும் குடியேற்றி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்படி இந்தியாவை கோரவேண்டும்.

(ஈ) காஷ்மீர் மக்களின் முழு ஆதரவும் பெற்ற நடுநிலைமை சர்க்கார் எற்படுத்த கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

(உ) காஷ்மீரிலும், ஜம்முவிலும் இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் இணைக்கப்படுவது குறித்து பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

ஜனவரி 15-ல் வைக்கப்பட்ட பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் ஜனவரி 17-ல் 7-35-க்கு மீண்டும் கூடியபோது அங்கத்தினர்களிடம் பாகிஸ்தான் தஸ்தாவேஜுகளின் நகல்கள் இருந்தன. சௌத்ரி ஜபருல்லா புகாருக்கு பதில் கூற எழுந்தார். ரஷ்ய பிரதிநிதி குரோனிகோ 2 மணி நேரம் பேசி பெற்றிருந்த ரிகார்டை ஜபருல்லாகான் இரண்டு மணி நேரத்தில் தோற்கடித்த பிறகு மறுநாள் ஜனவரி 18-ந்தேதி மேலும் ஒரு மணி நேரம் பேசினர். ஸர் ஜபருல்லாவின் 3-மணி நேரப் பேச்சினுல் மூன்று பிரச்னைகள் உருவாயின.

1. உடனடியாக போர் நிறுத்தப்படவேண்டும்.

2. அங்கியர்களும், ராணுவமும் காஷ்மீரிலிருந்து வெளியேறவேண்டும்.

3. பாரபட்சமற்ற சர்க்கார் ஏற்படுத்தி பொது ஜனவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

காஷ்மீர் பிரச்னையை குறித்து கீழ்வரும் மூன்று கட்டங்களை ஆரம்பத்திலேயே தெளிவாக்கியுள்ளோம்.

1. 33-வது சர்வதேச விதிப்படி சமரச முயற்சி

2. 136,37 விதிகளை ஒட்டி கவுன்ஸில் தலையிட்டு முடிவு செய்தல்.

3. கவுன்ஸிலின் முடிவுக்கு ஏதாவது ஒரு கட்சி இணங்க மறுத்தால் ஐக்கிய நாட்டு ஸ்தாபன சார்பில் படையெடுப்பு.

கவுன்ஸிலில் விவாதிக்கப்பட்ட பாகிஸ்தான் தஸ்தாவேஜிகள், தீர்மானங்கள் அனைத்தும் அநேகமாக முதல் கட்டத்தைக் குறித்தே இருந்தன.

ஜனவரி 20-ந்தேதி கமிஷன் நியமிப்பதன்மூலம் 33-வது விதிப்படி சமரஸத்திற்கு முயற்சிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. கமிஷனில் இந்தியா, பாகிஸ்தான் சார்பில் முறையே ஒவ்வொரு பிரதிநிதியும், இவ்விரண்டு பிரதிநிதிகளும் சேர்ந்து தேர்ந்தெடுக்கும் மூன்றுவது பிரதிநிதியும் ஆக 3 அங்கத்தினர்கள் இருப்பர். கவுன்ஸிலில் கூறும் ஆலோஜனைக்கிணங்க இந்தியா பாகிஸ்தான் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு இரண்டு தேசங்களிடையே சமரஸம் செய்துவைக்க விஜாரணை நடத்தும். "காஷ்மீர் பிரச்னை" என்றிருந்ததை "இந்தியா-பாகிஸ்தான் பிரச்னை" என்று கவுன்ஸில் ஜனவரி 22ல் மாற்றியதை இந்தியா எதிர்த்தபோது, காஷ்மீரப் பிரச்னையை முதலில் கவனிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

(5-ம் பக்கம் பார்க்க.)

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 15—3—'48 திங்கட்கிழமை { இதழ் 8

லீக் சாதித்ததென்ன?

இந்தியாவில் முஸ்லிம் லீகை புனருத்தாரணம் செய்ய ஜனாப் இஸ்மாயில் கோஷ்டியார் முடிவு செய்திருக்கின்றனர். அதைக்குறித்து நேர்மையும், விவேக புத்தியுமுள்ள எந்த ஒரு முஸ்லிமும் வருந்தாமல் இருப்பதற்கில்லை. லீக் நடவடிக்கைகளால் நாட்டிற்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட நஷ்டம் அளவிடமுடியாது. நாட்டின் ஐக்கியம் குலைந்தது முஸ்லிம்கள் சிதறுண்டனர். மேற்கு பாஞ்சால 54 லக்ஷம் முஸ்லிம்களின் அலங்கோலம், கஸன்பர் அலி வெளியிட்டதைப்போல் கடத்திச் செல்லப்பட்ட 50,000 முஸ்லிம் பெண்மணிகளின் துர்ப்பாக்கியம், 10 லக்ஷ முஸ்லிம்களின் கொலை, டில்லியின் சர்வ நாசம், அல்லாவின் பெயர் உச்சரிக்க ஒரு முஸ்லிமும் இல்லாமல் பாழடைந்து கிடக்கும் 25,000 கிழக்கு பாஞ்சால மசூதிகள், இந்தியாவெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் அடைந்துள்ள துர்கதி, எல்லாவற்றிற்கும் முஸ்லிம் லீகே காரணம். அதுமட்டுமல்ல. கிழக்கு, மேற்கு பாகிஸ்தான் யூனிட்டுகளிலிருந்து சொத்துக்கள், வீடுவாசல்கள், வியாபாரங்கள் எல்லாவற்றையும்விட்டுவிட்டு பெண்டு, பிள்ளை, பந்து, சுற்றத்தார்களையும் பறிகொடுத்துவிட்டு இந்தியாவுக்கு வந்திருக்கும் பல லக்ஷம் முஸ்லிம் அல்லாதாரின் அவதிக்கும் துன்பங்களுக்கும், பல லக்ஷம் ஹிந்து சீக்கியர்களின் கொலைக்கும் லீகும், லீக் லீடர்களுமே ஜவாப்தாரி. எல்லாவற்றையும்விட வகுப்பு வெறிக்குப் பலியான உலக உத்தமர், ஒடுக்கப்பட்ட மக்களின் தந்தை, இந்தியாவின் கௌரவமுமான மகாத்மா காந்திஜீயின் கொலைக்கு முஸ்லிம்லீக் வளர்த்த வெறுப்புக்கும் பங்கு உண்டு. முஸ்லிம் லீக் அரசியல் துறையில் நாட்டிற்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் செய்துள்ள சேவை இதுதான். இன்று மதம், கலாச்சாரம், பொருளாதாரம் என்று பேசும் லீக் லீடர்கள் பேச்சைக்கேட்டு நடந்த முஸ்லிம்களுக்கு லீக் லீடர்கள் குண்டர்கள் பட்டம் வாங்கிக்கொடுத்து, இஸ்லாம் என்ற மாத்திரத்தில் உலகம் வெறுக்கும்படி செய்திருக்கின்றனர். மதத்தின் புனிதப் பெயருக்கு களங்கத்தை உண்டுபண்ணியிருக்கின்றனர். இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு முஸ்லிம் லீக் இழைத்த தீங்கு இஸ்லாமிய சரித்திரத்திலேயே வேறு யாரும் இழைத்ததில்லை. சுயநலத்திற்காக இஸ்லாமின் பெயரால் முஸ்லிம்களை தவறான வழியில் இழுத்துச் சென்று இஸ்லாமின் கௌரவத்தை கெடுத்து இஸ்லாம் என்றால் குண்டாத்தனம் என்று உலகம் நினைக்கும்படி செய்துவிட்டார்கள். முஸ்லிம்களின் உண்மை தலைவர்களான உலமாக்களின்மீது பாமர முஸ்லிம்களை ஏவிவிட்டதும், மனிதவர்க்கம் வெட்கப்படும்படியான காரியங்களைச்செய்து முஸ்லிம்களின் கலாச்சார ஒழுக்கத்தை பாழாக்கியதுதான் சமூகத்துறையில் முஸ்லிம் லீக் செய்த சேவையாகும். அரசியல் துறையிலும், சமூகத்துறையிலும் முஸ்லிம் லீக் தீமையே செய்திருக்கிறது. எவ்வகையிலும் நீடித்திருக்க அதற்கு உரிமை இல்லை. அதை விட்டுவைக்க முஸ்லிம் பொதுமக்கள் சம்மதிக்கப் போவதில்லை. ஆகஸ்ட் 15-க்கு முன் லீக் லீடர்களின் அந்தர் பல்டி, குட்டிக்கரணம், கவாத்துக்கு அர்த்தம் இருந்து வந்தது. ஆனால் ஆட்டிவைப்பானின்றி இன்று இந்திய டொமினியனில் லீக் லீடர்கள் அந்தர் பல்டி அடிப்பதில் அர்த்தமில்லை. இனி அவர்களுக்கு இனாம் கொடுக்க யாருமில்லை. சென்னை சர்க்கார் மாளிகைக்குள் அந்தர்பல்டி அடிப்பதை விட்டு பீஹார், டில்லி, குர்முக் தேஸ்வர், கிழக்கு பஞ்சாப், ஜ்வாலாப்பூர் முதலிய இடங்களுக்கு சென்று முஸ்லிம் லீகை புனருத்தாரணம் செய்யும்படி லீக்லீடர்களுக்கு யோஜனை கூறுகிறோம். மேற்கூறிய இடங்கள் வெகு துலைவில் இருக்கின்றன என்று லீக் கோஷ்டியார் சலிப்படையலாம். நம் மாகாணத்தில் உள்ள திருவண்ணாமலை, ஈரோடு, ராஜபாளையம், இடைப்பாடி முஸ்லிம்களை சந்தித்து முஸ்லிம் லீக் புனருத்தாரணத்தைக் குறித்து முதலில் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறியும்படி கேட்டுக் கொள்கிறோம். லீக் லீடர்கள் இந்தியாவின் பல பாகங்களிலே கலவரங்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு செய்த சேவை என்ன? பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் பாதிக்கப்பட்ட ஹிந்து முஸ்லிம் மைனாரிடிகளுக்கு சேவை செய்வதில் காங்கிரஸ் முஸ்லிம்களைத்தவிர லீக் முஸ்லிம்கள் மருந்துக்கும் இல்லை. பொருளாதாரத்தைப் பற்றிபேசும் லீக் கோஷ்டியார் வகுத்திருக்கும் பொருளாதார திட்டத்தை வெளியிடும்படி சவால் விடுக்கிறோம். லீக் முதலாளிகளின் பொருளாதாரச் சுரண்டலை தவிர

லீக் லீடர்களுக்கும் பொருளாதார புனரமைப்புக்கும் என்ன சம்மந்தம்! மதம், கலாசாரம், பொருளாதாரம் என்று இவர்கள் கூச்சல் போடுவது அவைகளையே அவமதிப்பதாகும். லீகைக்கலைக்க லீக் லீடர்கள் பயப்படுவது இயற்கையே. லீகை இஸ்லாம் என்றும், லீகை எதிர்ப்பவர்கள் இஸ்லாமிய விரோதிகள் என்றும், மிஸ்டர் ஜின்னாவின் பேச்சு வேதவாக்கென்றும் அதை ஏற்காதவர்கள் முஸ்லிம்கள் அல்லவென்றும் பத்வாக்கள் சரமாரியாக விடுத்து வந்த லீக் லீடர்கள், லீகை கலைத்து விட்டபிறகு முஸ்லிம் பொதுமக்களுக்கு என்ன சமாதானம் கூறமுடியும்? இருப்பினும் முஸ்லிம் பொதுமக்கள் லீக் லீடர்களை எதிர்பார்த்திருக்காமல் தைரியமாக முன்வந்து முஸ்லிம் லீகுடன் லீக் லீடர்களையும் சேர்த்து ஒழித்துக்கட்டும்படி அழைக்கின்றோம். லீக் நீடிப்பதால் மஹாசபையும் நீடிக்கும். இதர வகுப்புவாத ஸ்தாபனங்களும் இருந்து கொண்டிருக்கும் இந்நிலையில் இதுவரை நடந்த துக்ககரமான சம்பவங்கள் இனியும் நடந்து கொண்டிருப்பது சாத்தியமாகும். எனவே இந்திய முஸல்மான்கள் கலகச் சரித்திரத்தை தாங்கி கலக சகாப்தத்தின் சின்னமாக விளங்கும் முஸ்லிம் லீகை எவ்விதத்திலும் நீடித்திருக்க அனுமதிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

(3-ம பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான தஸ்தாவேஜுகளும் தீர்மானங்களும்

கவுன்ஸில் தலைவர் கேட்டுக்கொண்டதன் பேரில் அதே வாரத்தில் இந்திய பாகிஸ்தான் பிரதிநிதிகளின் வட்டமேஜை மகாநாடு கூடி அதன் தலைவரும் இதர அங்கத்தினர்களும் தீர்மானங்களை கவுன்ஸில் தலைவரிடம் சமர்ப்பித்தனர். இந்தியா, பாகிஸ்தான் தீர்மானங்கள் ஜனவரி 29-ந்தேதி பாதுகாப்பு கவுன்ஸில் தலைவரிடம் மிஸ்டர் அய்யங்காரும் ஸர் ஜபருல்லாகானும் சமர்ப்பித்தனர்.

இந்தியத் தீர்மானங்கள்

1. காஷ்மீர யுத்தமும் படையெடுப்பாளர்களின் தாக்குதல்களும் நிறுத்தப்படவேண்டும். காஷ்மீரைவிட்டு வெளியேறும்படி பாகிஸ்தான் சாத்தியமான எல்லாத்துறைகளிலும், மலைஜாதியினரை நிர்ப்பந்திக்க வேண்டும். பாகிஸ்தான் வழியாக காஷ்மீரில் வருவதை அனுமதிப்பதோ, உதவி செய்வதோ கூடாது.

2. படையெடுப்பாளர்கள் வெளியேற்றப்பட்ட பிறகு காஷ்மீர் மக்கள் திருப்பி அழைக்கப்பட வேண்டும். எவ்வித நிர்ப்பந்தமுமின்றி அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும். வாக்கெடுப்பு சரியாக நடந்தேற சமஸ்தானத்தில் அமைதியான சூழ்நிலை ஏற்படுத்துவதில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்தியாவுடன் இணைந்திருக்கும்வரை சமஸ்தான அமைதியை பாதுகாக்க இந்திய ராணுவம் இருந்துவரவேண்டும்.

3. அமைதி ஏற்பட்ட பிறகு சமஸ்தான நிர்வாகத்தை மஹராஜா, அப்துல்லாவை பிரதமராகக் கொண்ட மந்திரி சபையிடம், ஒப்படைக்கவேண்டும்.

பாகிஸ்தான் தீர்மானங்கள்.

ஜம்மு, காஷ்மீரின் இணைப்பு பிரச்னை பாரபக்ஷமற்ற முறையில் சர்வதேச அதிகாரம் கன்ட்ரோல் மேற்பார்வையின்கீழ் ஜனநாயக முறையில் பொதுஜன வாக்கெடுப்பின்மூலம் முடிவு செய்யவேண்டுமென்று ஐ. நா. ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களான இந்தியா, பாகிஸ்தான் இரண்டு நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன. இரண்டு நாடுகளின் பரஸ்பர உடன்பாட்டைக் குறித்து பாதுகாப்பு கவுன்ஸில் திருப்தியடைகிறது. அவ்விதம் பொதுஜன வாக்கெடுக்க குறிப்பிட்ட சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதவசியமென கவுன்ஸில் 20 ஜனவரியில் நியமித்த கமிஷனுக்கு கீழ்வரும் ஆலோஜனைகளை கூற முடிவு செய்கின்றது.

1. ஜம்மு, காஷ்மீர் சமஸ்தானத்தில் பாரபக்ஷமற்ற இடைக்கால சர்க்கார் ஏற்படுத்துதல்.

2. சமஸ்தான எல்லையிலிருந்து இந்திய டொமினியன் மலைஜாதியினரின் ராணுவத்தையும் சமஸ்தான விஷயங்களில் தலையிடும் அனைவரையும் (இந்தியாவைச் சேர்ந்தவர்களாயினும், பாகிஸ்தானை சேர்ந்தவர்களாயினும்) வெளியேற்றுதல்.

3. ஆகஸ்ட் 15-ல் நடந்த சம்பவங்களால் துன்பம் அடைந்து ஜம்மு, காஷ்மீரைவிட்டு வெளியேறிய அல்லது வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட எல்லா காஷ்மீர் வாசிகளையும் மீண்டும் குடியேற்றுதல்.

4. சுதந்திரமாகவும், நியாயமாகவும் பொதுஜன வாக்கெடுப்பு நடத்த நியமிக்கப்பட்டுள்ள கமிஷனுக்கு தாங்கள் நியமிக்கும் பிரதிநிதிகளின் பெயர்களை அறிவிக்கவும், கவுன்ஸிலின் ஆலோசனைப்படி கமிஷனின் வேலைகளில் பரிபூரணமாக ஒத்துழைக்கும்படியும் உதவி செய்யும்படியும் அது சம்மந்தப்பட்ட இரு சாரரையும் இந்தத் தீர்மானம் கேட்டுக்கொள்கிறது.

இந்தியா பாகிஸ்தான் தனித்தனி தீர்மானங்களால் சமரசம் ஏற்படாமல் போய்விட்டது. எனவே கவுன்ஸில் தலைவர் வான்லிங்கன் ஜனவரி 30-ல் தன் சார்பாக இரண்டு தீர்மானங்கள் பிரேரித்தார்.

(தொடரும்)

மேற்குபஞ்சாப் அகதி முகாம்களில் இன்னும் 10 லக்ஷத்திற்குமேல்

முஸ்லிம் அகதிகள்

பசிக்கும் குளிருக்கும் கணக்கற்றவர்கள் பலி.

(ஸ்டேட்ஸ் மென்)

மேற்கு பஞ்சாப் அகதிகள் பராமரிப்பில் பல குறைகள் காணப்படுகின்றன. பொதுஜனங்களுடைய கோபத்தை ஒரு சாராரின் பேரிலேயே திருப்பிவிட்டு தங்கள் கடமைகளிலிருந்து தப்ப முயற்சிகள் நடக்கின்றன. அகதிகளின் குறைகளை கவனிக்க முஸ்லிம் லீக் பல கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கின்றது. 1947 கடைசி நான்கு மாதங்களில் ஏழு லக்ஷம் அகதிகள் மேற்கு பஞ்சாபிலுள்ள 14 முகாம்களில் வைக்கப்பட்டனர். அங்கிருந்த ஆங்கிலேய, ஹிந்து, சீக்கிய அதிகாரிகள் அநேகமாய் இந்தியாவுக்கு வந்துவிட்டதால் சுமார் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம் அதிகாரிகள்தான் இருந்தனர். அவர்களுக்கும் பெரிய பொறுப்புக்களை நிறைவேற்றிவைக்கும் திறமை இல்லாமல் இருந்தது. உள்நாட்டு நிர்வாகத்துடன் அகதிகள் பிரச்னையும் சேர்ந்ததால் அவர்களுடைய நிலைமை மிகவும் சங்கடமாகிவிட்டது. உள்நாட்டு குழப்பம், பழி வாங்கும் எண்ணம், துவேஷத்திற்கு ஆளான தொண்டர்கள் ஒரு ஆபத்தாக மாறிவிட்டனர். தொண்டர்களுக்கு திறமை இருக்கவில்லை. அதுசமயம் ராணுவம், அகதிகளை வெளியேற்றும் ஸ்தாபனம் திறமையாக வேலை செய்யாமல் இருந்திருந்தால் அகதிகள் அங்கு போவதும் சாத்தியமாயிருக்காது. பட்டாளமும், அதன் அதிகாரிகளும் கவர்மெண்டின் நிர்வாகத்துக்கு உதவி செய்யாமல் இருந்திருந்தால் நிர்வாகமே சீர்குலைந்து போயிருக்கும். மாணவர்கள், முஸ்லிம்லீக் தொண்டர்களினால் அதிகமாக உதவியளிக்க முடியவில்லை. மூன்று மாதத்திற்கு முன்னால்தான் அகதிகளுக்கு வசிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டன. நிலக்கரி பஞ்சத்தால் பாகிஸ்தான் ரயில்வேக்கு அதிக சிரமம் உண்டாயிற்று பெரிய அதிகாரிகளும்கூட இதை எப்படிச் செய்வதென்று திகைத்துப்போயினர். இதில் கலகங்கள் வேறு அகதிகளின் உயிர்களுக்கு ஆபத்தாய் இருந்தது. இத்தருணத்தில் அகதிகளை வெளியேற்றும் வேலையும் சிரமமாய் இருந்தது. தற்சமயம் வடக்கே அடக்கிலிருந்து தெற்கே ஹாஸா்ர் வரையில் 14 பெரிய அகதி முகாம்கள் இருக்கின்றன. இன்றைய தினமும் அவைகளில் தங்களுடைய சொத்துக்களை இழந்து அனாதைகளாக கஷ்ட நிஷ்டூரங்களுக்குள்ளாகி 10 லக்ஷத்திற்குமேல் (20 லக்ஷம் அகதிகள்) இருக்கின்றனர் லாகூர், லயால்பூர். மிண்ட் குமரி இவ்விடங்களில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அகதிகள் அநேகமாய் நடந்துபோய் சேர்ந்தவர்கள்.

லாகூரில் சுமார் 2½ லக்ஷம், லாயல்பூரில் 1½ லக்ஷம், மூல்தானில் 1 லக்ஷம், மிண்ட் குமரியில் 50 ஆயிரம் அகதிகள் முகாம்களில் இருக்கின்றனர். அவர்கள் பகலில் முகாம்களிலும் இரவில் ஸ்டேஷன்கள், சர்க்கார் கட்டிடங்கள், மைதானங்களிலும், படுத்து குளிரில் மரணவஸ்தையை அனுபவிக்கின்றனர். ஒரு கமிட்டியால் இவர்களுக்கு ஓரளவு கம்பளிகள் விநியோகம் செய்யப்படுகிறது. இவர்களுக்காக மேற்கு பாஞ்சால கவர்மெண்டார் இதுவரை நான்கு கோடி ரூபாய்க்குமேல் செலவிட முடியாமல் திண்டாடுகிறார்கள். அதுவும் அகதிகள் சாப்பாடு, மற்ற சில்லரை வேலைகளிலேயே செலவிடப்படுகிறது.

இரண்டாவதாக காயிதே ஆஜம் பண்டு மூலமாக உதவி செய்யப்படுகிறது. அது சில லக்ஷத்திற்கு மேல் அதிகரிக்கவில்லை. அதன் மூலம் ஆஸ்பத்திரி, படுக்கை, பால் முதலியன குறைந்த அளவிலும் செய்ய வசதியில்லாமல் இருக்கிறது. பெட்ரோல், மற்ற போக்குவரவு வசதிகள் இல்லாத காரணத்தினால் அந்த குறைந்த உதவிகளும் செய்ய சிரமமாய் இருக்கிறது. லஞ்சமும், திருட்டும் அளவுக்கு மீறி இருந்தபோதிலும் மேற்கு பாஞ்சால கவர்மெண்டார் 75 சதவிகிதம் அகதிகளுக்கு போய்சேர்ந்து வருகின்றது என்று திருப்தியடைகின்றனர்.

காயிதே ஆஜம் நிதியில் 1947 முடிய 32,35,000 ரூபாய் சேர்ந்தது. சென்ற வருஷக் கடைசி நான்கு மாதங்களில் அகதி ஒன்றுக்கு 2 அணா விதம் (லஞ்சம் உள்பட) போய் சேர்ந்திருக்கலாம். பல பண்டுகள் ஆஸ்பத்திரிகளுக்கு தாமாகவே நன்கொடைகளை அளித்தன. பல பெண்கள் வியாதிகளினால் கஷ்டப்படும் அகதிகளுக்கு சிகிச்சை செய்தனர் பஞ்சாபிகள் அந்த தங்கியிருந்த முஸ்லிம் அகதிகளை கொடூரமாய் நடத்தினர்.

முகாம் நிர்வாகத்தில் குறைகள்.

சில முகாம்களின் நிர்வாகம் மனிதர்களை திடுக்கிடவைத்துவிடும். மிண்ட்குமரி, மூல்தான், ஷகதரா முகாம்கள் ரொம்பவும் மோசமாக இருக்கிறது ஷகதரா அகதிகள் தங்குவதற்காக இடவசதி அளிக்கப்படவில்லை. ஆயினும் அகதிகள் மைதானத்தை பார்த்துவிட்டு தாமாகவே அமர்ந்துவிட்டனர். பகல், இரவெல்லாம் திறந்த வானத்தின்கீழ் வீழ்ந்து கிடக்கின்றனர். லாகூரில் முகாமிற்கு அருகில் உள்ள மைதானத்தைக் கக்கூசாக உபயோகிக்கின்றனர். இந்த மைதானத்தை சுற்றி ஆஸ்பத்திரி, ஸ்டோர், சமையல் அறை, அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் வசிப்பதற்காகவும் சில குடிசைகள் காணப்படுகின்றன. அவைகளுக்கிடையே புழுதியடைந்த 30 அடி நீளம் 10 அடி அகலமுள்ள குடிசைகளும் இருக்கின்றன இந்த பெரிய குடிசைகள்தான் அவர்களுக்கு சுவர்க்கமாய் இருக்கிறது. அந்த குடிசைகளில் 10 பெரிய குடும்பங்கள் தங்கி இருக்கின்றன. சிலர் அந்த குடிசைகளை சுற்றி அடுப்புக்கள் அமைத்து சமையல் செய்கின்றன. மற்றவர்கள் விமான நிலையத்தில் விழுந்து குளிரில் கஷ்டப்பட்டு வருகிறார்கள். கிழிந்துபோன கூடாரங்களில் வசிக்கும் துர்ப்பாக்கியசாலிகள்தான்பலவித மான தொல்லைகளுக்கு ஆளாகி வருகிறார்கள். வால்டன் முகாமில் இருந்து டவுனுக்கு அனுப்பப்பட்டவர்கள்தான் பாக்கியசாலிகளாவர். அங்கிருந்த பெரிய பங்களாக்களின் பூட்டுக்களை உடைத்து அதிகாரிகள் அவர்களை அங்கு வசிக்க அனுமதித்திருக்கிறார்கள்.

வால்டன் முகாமில் ஒரு லட்சத்து எழுபதினாயிரம் பேர்கள் தங்கலாம் ஆனால் அங்கு லக்ஷக்கணக்கானவர்கள் வந்து குவிந்துவிடுகின்றார்கள். சென்ற மாதத்தில் பத்தாயிரம் மேவு முஸ்லிம்களும், மற்ற முஸ்லிம்களும் அங்கு போய் சேர்ந்தனர். அவர்கள் குட்காவிலிருந்து நடந்துபோனவர்கள். முகாமுக்கு கர்நால், ராஜ்புத், பாட்டியாலா ஸ்டேட் முஸ்லிம்கள் 12 ஆயிரம் பேர் 1200 வண்டிகள், பல கால்நடைகளுடன் வந்து சேர்ந்தனர். அவர்களுடன் தொத்து நோய்களும் கூடவே வந்து சேர்ந்தது. தொத்து நோய், களைப்பு, குளிரினால் ஆயிரக்கணக்கானவர் பலியாகின்றனர். குளிர் அதிகமாக இருக்கும் இத்தருணத்தில் படுக்கைகளும் கம்பளிகளும் இல்லாமல் அங்கு உயிர் வாழ முடியாது. அவர்களுக்கு கவர்மெண்டாரால் கம்பளங்கள் கொடுக்கப்படுவது உண்மைதான். ஆனால் முகாம்களில் கூட்டம் அதிகரித்துவிடும் என்ற காரணத்தால் அந்த கம்பளிகள் இரவில்தான் விநியோகிக்கப்படுகிறது. சென்ற வாரம் இந்த வால்டன் முகாமில் 800 அகதிகள்தான் குளிருக்கு பலியாகி இருக்கின்றார்கள். ஆஸ்பத்திரிகளிலுள்ள வியாதியஸ்தர்களின் உடம்பில் எலும்பைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இது என்ன வியாதியாய் இருக்குமென்று நமக்கு புலப்படவில்லை.

சர்ஜிகல் வார்டில் படுக்கையில்லாத சில கட்டில்கள், ஆறு டாக்டர்கள் மூன்று நர்சுகள், சில வாலண்டியர்கள் காணப்படுகிறார்கள். சில சமயங்களில் மாத்திரம் இனாகுலேஷன் செய்யப்படுகின்றது. அகதிகளுக்கு இரண்டு வேளை ஓர் அளவு ஆகாரம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு கொடுக்கும் மாவு மிகவும் பழைய கசந்துபோனதாகும். அரிசியும் கொடுக்கிறார்கள். ஆனால் அதை அவர்கள் விரும்புவதில்லை. மாவு, மாவு என்று கதறுகிறார்கள். அகதிகளுக்காக கூட்டுறவு சங்கங்கள் திறந்திருக்கின்றன. விலைகளும் அதிகமில்லை. ஆனால் அவர்களிடம் பணம் இல்லாததினால் அந்த வசதியை அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. அதிகாரிகளும் தொண்டர்களும் அந்த மலிவான சரக்குகளைப்பெற்று பலன் அடைகிறார்கள். முகாம்களில் அவ்வளவு கூட்டம் இருந்தபோதிலும் ஒருவித சச்சரவுமில்லாமல் நிச்சப்தமாக இருப்பதே அவர்களுடைய பலஹீனத்துக்கு ஒரு சான்றாகும் ஷஹதரா முகாமைவிட லாகூர் முகாமின் நிர்வாகம் சிறிது நன்றாக இருக்கிறது முகாம்களின் அதிகாரிகள் அகதிகளை வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. இருந்தபோதிலும் அவர்கள் எப்படியோ வெளிவந்து லாகூர், மற்ற நகரங்களில் தெருத்தெருவாக பிச்சையெடுத்து அலைந்து திரிவதைப் பார்க்கலாம்.

இரண்டு லக்ஷம் முஸ்லிம் அகதிகள் ரயில் வசதியில்லாததால் மேற்குபாஞ்சாலத்திலிருந்து சிந்து மாகாணத்திற்கு கால்நடையாக புறப்படுகிறார்கள். இவர்கள் 650 மைல் நடக்கவேண்டியதாக இருக்கிறது. சிந்து பாலைவனத்தைத் தாண்டி அவர்கள் காராச்சி போய்ச் சேரவேண்டும். 50,000 முஸ்லிம்கள் இந்த பிரயாணத்திற்கு பலியாகக்கூடும். ஆனால் மிஸ்டர் ஜின்னா பாகிஸ்தானுக்கு செய்யப்பட்ட தியாகம் என்று சுலபமாக சொல்லிவிடுவார்.

சென்னை மாகாண முஸ்லிம் மகாநாடு

சென்னை, 8. மார்ச், 48

கோகலே ஹாலில் சென்னை மாகாண முஸ்லிம்களின் கூட்டம் நடந்தது. ஜனுப் அப்துல் ரவுப் பாஷா தலைமை வகித்தார். ஹிந்து முஸ்லிம் சகோதரர்கள் கலந்துகொண்டனர். 'ஆஸாத்' ஆசிரியர் மௌலானா அப்துல் ஹகீம் குர் ஆன் ஓதினர்.

தலைவர் பேசுகையில் "லக்னோ மகாநாடு செய்த முடிவுகள் அவசியமும், முக்கியத்துவமும், வாய்ந்தவை என்பதை காலப்போக்கு நிருபித்துக் காட்டிவிட்டது. நாம் என்றுமே ஒரே கொள்கையை அனுஷ்டித்தோம். ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமையுடன் காங்கிரஸுடன் ஒத்துழைத்து முன்னேறுவது நம் வேலையாக இருந்து வந்திருக்கிறது. இன்று இதர முஸ்லிம் கட்சிகளும்கூட நம் கொள்கையையும் முடிவையும் அனுஷ்டிக்க வேண்டிய நிலைமையில் இருந்து வருகின்றன" என்று கூறினர்.

பிறகு பேசிய ஜனுப் அல்லாபிச்சை அவர்கள் டெல்லி கன்வென்ஷனிலிருந்து அகில இந்திய முஸ்லிம் லக்னோ மகாநாடுவரை நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தையும் விளக்கிய பிறகு இந்தியாவில் வகுப்புவாத ஸ்தாபனங்கள் நீடிப்பது எவ்விதத்திலும் உகந்ததல்ல என்பதை தெளிவுபடுத்தினர்.

"முஸல்மான்கள் கூடி இவ்வித முடிவு செய்திருக்கின்றனர். வகுப்புவாத விஷத்தினுல் கடந்த காலத்தில் காட்டுமிராண்டித்தனம் பரவிற்று. நம்முடைய மாகாணம் சம்மந்தப்பட்டவரை அம்மாதிரியான வேற்றுமை இல்லாமல் இருப்பதைக் குறித்து நாம் அனைவரும் பெருமைப்பட உரிமை உண்டு. கட்சிகள் சம்மந்தப்பட்டவரை வகுப்புவர்தமற்ற ஸ்தாபனம் காங்கிரஸ் மஹாசபை ஒன்றுதான். அப்படியிருக்க ஐக்கிய முன்னேற்ற கமிட்டியின் அவசியம் என்ன? என்று கேட்டால் அது முற்றிலும் நியாயமேயாகும். ஆயினும் முஸ்லிம் லீகின் வேற்றுமை பிரசாரத்தால் வழிதவறியிருக்கும் பாமர முஸ்லிம்களை நேர்வழிப்படுத்த நாம் வேலை செய்தாக வேண்டும். அவ்வித நோக்கத்தைக் கொண்டே ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கின்றது. இக் கமிட்டியில் முஸ்லிம்கள் மட்டிலும் தான் சேரமுடியுமென்ற நிபந்தனை இல்லை. இந்தியாவில் அமைதி, சமாதானத்தை நிலைநாட்ட விரும்பும் இந்தியர்கள் அனைவரும் இதில் அங்கத்தினர்களாக சேரலாம். வேறு வார்த்தைகளில் இக்கமிட்டியை காங்கிரஸ் பிரசாரம் செய்யும் தொண்டர் படையென்றே சொல்ல வேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அதிலிருப்பர். வகுப்புவாதம் எங்கிருப்பினும் அதைப் போக்குவதே இதன் வேலை. காங்கிரஸ்காரர்களுக்குள் வகுப்புவாதமிருப்பினும் அதையும் அகற்ற முயற்சிக்கும்.

இஸ்லாமுக்கு ஆபத்து என்று கோஷித்து முஸ்லிம் லீக், முஸ்லிம் சமூகத்தை தவறான வழியில் இழுத்துச் சென்றுவிட்டது. அதற்கு எதிராக ஹிந்து மஹாசபை உருவாயிற்று. முஸ்லிம் லீகுக்கு பதிலளிக்கும் முறையில் அதுவும் சூழ்நிலையை விஷமயமாக்கத் தயங்கவில்லை.

ஸர் ஸையத் அஹமத்கான் காலத்திற்குப் பிறகு முஸ்லிம்கள் இந்திய சுதந்திர போராட்டத்தில் பின் தங்கிவிட்டனர் என்பது உண்மையே. ஆயினும் முஸ்லிம்கள் சுதந்திர ஆர்வத்தில் அதற்கு முன் முன்னணியில் இருந்துவந்தனர்.

ஜனுப் இஸ்மாயில் சாஹிப் சென்னையில் முஸ்லிம் லீக் கூட்டத்தை கூட்டுகிறர். அவருடைய செய்கை விவேகமற்றது அமைதியை அவர் விரும்பினல் அப்படிச் செய்திருக்க முடியாது. எவ்வகையிலும் முஸ்லிம் லீக் நீடிப்பது சரியல்ல முஸ்லிம்களின் நிலைமை ஏற்கனவே மிகவும் பலஹீனமடைந்துவிட்டது. இனியம் லீக் நீடிப்பதால் முஸ்லிம்களின் நிலைமை மேலும் மோசமடையும். தங்களுடைய நிலைமையை சீர்படுத்தி சக்தியை பெருக்க முஸ்லிம்கள் எண்ணினுல் காங்கிரஸில் அவர்கள் சேரவேண்டியதவசியம். மௌலானா அபுல் கலாம் ஆஸாதைப் போன்ற சில பெரியார்கள் காங்கிரஸில் இருந்துவருவதன் காரணமாகவே இன்று இந்திய டொமினியனில் இருந்து வருவது சாத்தியமாயிற்று. முஸ்லிம்கள் அனைவரும் காங்கிரஸில் இருந்திருந்தால் எந்த அளவு நன்மை முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்க முடியும் என்பதை முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

பிறகு பேசிய மதுரை மௌலானா சாகேப், "நாம் எல்லோரும் சுதந்திரத்திற்காக போராடினேம் முஸ்லிம்களும் நாட்டிற்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும் மாபெரும் தியாகங்களை செய்திருக்கின்றனர். இருப்பினும் சர்ச்சில் கோஷ்டியின் கைபொம்மை

களின் ஒரு கூட்டம் முஸ்லிம்களிடையே பிளவு உண்டு பண்ணியது மட்டுமின்றி ஹிந்து முஸ்லிம் களையும் பிரித்துவிட்டனர். அதன் மூலம் அவர்கள் வெள்ளையர்களுக்கு உதவி செய்திருக்கின்றரே ஒழிய தேசத்திற்கோ, முஸல்மான்களுக்கோ எவ்வித நன்மை யும் செய்யவில்லை. என்றுமே இந்தியாவில் முஸ்லிம் லீகுக்கு அவசியம் இருந்ததில்லை. இன்றைக்கோ முஸ்லிம் லீக் நீடிப்பதால் பெரும் நஷ்டமே விளையும். வகுப்புவாதத்திற்கு மகாத்மாஜி இலக்காகிவிட்டார். இனியும் வகுப்புவாதத்தை விட்டுவைப்பது பாப மாகும். முஸ்லிம்கள் அனைவரும் காங்கிரஸில் சேர்ந்து வகுப்புவாத சாபக் கேட்டை இந்தியாவிலிருந்து அகற்ற பாடுபட வேண்டும். சென்னை மாகாண லீக் தலைவர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு முஸ்லிம் லீக் நீடித்திருக்க வேண்டிய அவசியத்தை விளக்க முன்வந்திருந்தால் நலமாய் இருந்திருக்கும். பிறகு பேசிய S. A. அப்துல் ஹமீத் இஸ்லாமின் பெயரால் மிஸ்டர் ஜின்னா முஸ்லிம்களுக்கு இழைத்த தீங்கைப் போல இதுவரையாரும் முஸ்லிம்களுக்கு தீங்கிழைத் ததில்லை என்றும் இஸ்லாமிய ராஜ்ய கோஷம், ஹிந்து ராஜ்ய கோஷத்தை கிளப்பிவிட்டதென்றும், லீகின் விஷத்திலிருந்து தப்ப முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பிறகு பேசிய பண்டாரவாடை கூ. அ. மௌலானா அப்துல் மஜீத் சாகெப், "முஸ்லிம் லீக் முஸ்லிம் சமூகத்திற்கு தீமையே விளைவிக்கும் என்னும் முடிவுதான் என்னுடைய அரசியல் வாழ்க்கைக்கு அடிகோலிற்று. அதிலிருந்து முஸ்லிம்களை காப்பாற் றவே இன்றுவரை நான் பாடுபட்டு வந்துள்ளேன். தேசத்திற்கும், முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்கும் ஸ்தாபனம் காங்கிரஸே. முஸ்லிம்களை தவருன வழி யில் எடுத்துச் சென்றது மட்டுமின்றி முஸ்லிம் லீக் ஒவ்வொரு விஷயத்திலும் விசித்திரமாகவே நடந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸின் பூரண சுதந்திர லக்ஷிய தீர்மானம் முஸ்லிம்களால் பிரேரிக்கப்பட்டது. மூவர்ணக் கொடி கிலாபத் கமிட்டியால் சிபார்சு செய்யப்பட்டது. லீக் பிரசாரம் முஸ்லிம்களை தனித் திருக்கும்படி செய்ததன்றி அவர்களுடைய கடந்த கால சேவைகளையும், தியாகங்களையும் வீணாக்கியிருக் கின்றது. நடந்தது நடந்தேறிவிட்டது. இனி லீகும் லீகின் கொடியும் அவசியமில்லையென்று முஸ்லிம்கள் உணர்ந்துவிட்டனர். மூவர்ணக் கொடியை நாம் ஏற்றிவைத்தோம். இனி அதுவே நம் கொடி. அதன் கௌரவத்தை உயர்த்த நாம் அனைவரும் பாடுபடு வோம்" என்று உறுதியளித்தார்.

வேலூரைச்சேர்ந்த ரஹ்மான் பேக் பேசுகையில் லக்ஷக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், கோடிக் கணக்கான மக்கள் வீடிழந்தும் தவிப்பதற்கு முஸ்லிம் லீகே காரணம். எனவே லீக் கலைக்கப்பட வேண்டு மென்றும், நாம் சொல்லி வந்ததையெல்லாம் அலட் சியம் செய்த முஸ்லிம் சமூகம் இன்று அதை உணர்ந்துவிட்டது என்றும் கூறினர்.

லக்ஷ்மி ரத்ன பாரதி பேசுகையில், 10-ந்தேதி கூடவிருக்கும் லீக் கூட்டம் லீகை கலைத்துவிட வேண்டுமென வேண்டிக்கொண்டார். "நாம் ஒன்று பட்டு நாட்டை முன்னேற்ற வேண்டும். முஸ்லிம் லீகின் வேலை பூர்த்தியாகி விட்டது. இனியும் முஸ்லிம் லீக் நீடிப்பதால் ஒற்றுமை நிலைநாட்டுவது சிரமமாகி விடும். நான் மிஸ்டர் ஜின்னாவை குறை கூறவில்லை ஐக்கியப்படுங்கள் என்று நிச்சயமாக உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாட்டின் நலனும், நாட்டு மக்களின் நலனும் ஒற்றுமையில் அடங்கியிருக் கின்றது" என்று வற்புறுத்தினர்.

'ஆஸாத்' ஆசிரியர் மௌலானா அப்துல் ஹக்கீம் பேசுகையில், "முஸ்லிம் லீக் நீடிப்பது முஸ்லிம் சமூகத்தின் அழிவாகும். முஸ்லிம் லீக் அழிவினல் முஸ்லிம்கள் பிழைக்கமுடியும். லீக் மட்டுமின்றி லீக் பத்திரிகைகளும் முடக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் லீகை விடவேண்டும். அரசாங்கம் லீக் பத்திரிகை களை தடை செய்ய வேண்டும். கள்ளங் கபடமற்ற பாமர முஸ்லிம்களை இன்றைக்கும் லீக் பத்திரிகைகள் ஏமாற்றி வருகின்றன. பாகிஸ்தான் பட்ஜெட்டில் 79 கோடி ரூபாய் வருமானம் காட்டப்பட்டு இருப்பது முஸ்லிம்களையும் உலகத்தையும் ஏமாற்றுவ தற்கேயாகும். ரயில்வே வருமானம் 36 கோடி ரூபாய் பாகிஸ்தான் வருமானத்தோடு சேர்க்கப்பட் டிருப்பதுடன் பாதுகாப்பு செலவினம் சேர்க்கப்பட வில்லை.

இஸ்லாமிய ராஜ்யத்தின் பெயரால் அடைந்த பாகிஸ்தானில் கலால் வருமானம் பாகிஸ்தான் வரு மானத்தின் ஒரு பகுதியாக இருக்கையில் இங்குள்ள முஸ்லிம்கள் பாகிஸ்தானை இஸ்லாமிய ராஜ்யமென்று அழைப்பது பைத்தியக்காரத் தனமாகும். ஏறக் குறைய 196 கோடி ரூபாய் ரயில்வே வருமானத்தை பட்ஜெட்டில் சேர்க்காமல் 121 கோடி ரூபாய் பாது காப்பு செலவுக்காக இந்தியா ஒதுக்கியிருக்கையில் ரயில்வே வருமானத்தையும் சேர்த்துக்கொண்டு பாது காப்பு செலவினத்தையும் காட்டாமல் பாகிஸ்தான் பட்ஜெட் சமர்ப்பித்தது உலக நாடுகளை ஏமாற்றி கடன் வாங்குவதற்கேயாகும். இங்கிலையில் இங்குள்ள லீக் பத்திரிகைகள் பிரமாதப்படுத்தி எழுதுவதால்

முஸ்லிம்கள் மயங்காமல் இந்த நாட்டை தங்களுடைய நாடு என்று நினைத்து அதன் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வரும்படி அழைக்கின்றேன்" என்று முஸ்லிம்களை அழைத்தார்.

ஜனாப் M. ஜமால் முகம்மது சாகிப் ஆரம்பம் முதல் கடைசிவரை கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார். முஸ்லிம் லீக் கலைக்கப்பட வேண்டிய அவசியத்தையும், ஹிந்து, முஸ்லிம்கள் ஒன்றுபட்டு உழைப்பதால் ஏற்படக் கூடிய நன்மைகளையும், மகாத்மா காந்திஜியின் தன்னலமற்ற தியாகத்தையும், மிஸ்டர் ஜின்னாவின் சுயநலம், அரசியல், ஞான சூன்யம், பொறுமையால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும், துன்பத்தையும்பற்றி சாங்கோபாங்கமாக விளக்கினார். பல தீர்மானங்கள் அவரால் பிரேரிக்கப்பட்டு நிறைவேறின. உடனடியாக முஸ்லிம்கள் லீகைவிட்டு வெளியேற வேண்டுமென யோஜனை கூறினர்.

ஜனாப் M. M. இஸ்மாயில் பேசுகையில், "மஹாத்மாஜியை முஸ்லிம் எவனும் கொல்லவில்லையென்றும், ஹிந்து ஒருவனால் கொல்லப்பட்டார் என்றும் முஸ்லிம்களில் சிலர் சொல்லுகின்றனர். இந்த நாட்டில் வகுப்புவாதத்தை முஸ்லிம் லீக்தான் தூண்டிவிட்டது மஹாத்மாஜி வகுப்புவாதத்திற்கு இலக்கானார். மஹாத்மாஜியை முஸ்லிம் எவனும் கொல்லவில்லையாயினும் லீகர்களின் கைகளும் மஹாத்மாஜியின் ரத்தத்தால் சிவந்தேயிருக்கின்றன" என்று உணர்ச்சியுடனும், ஆவேசத்துடனும் பேசினர்.

ஜனாப் ஹாபீஸ் மீரான் சாகிப், K. N. அப்துல் காதர் சாகிப் (தென்காசி) முஸ்லிம் லீகின் போக்கினால் முஸல்மான்கள் அனுபவித்த துன்பங்களை வெகு உருக்கமாக பிரஸ்தாபித்தார்கள்.

ஜனாப் இஸ்மாயில் (முத்துப்பேட்டை) ஜனாப் ஷேக் பீர் முகம்மது (கள்ளிடைகுறிச்சி) அப்துல் காதர் (செங்கல்பட்டு), இனயத் அலி, அப்துல் சலாம் (ஆந்திரா), முதலியோர் உணர்ச்சிமிக்க பேசினர். வெளியூர் சென்றிருந்தமையால் வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்த ஜனாப் ஹாஜி M. அப்தர் ரஹ்மான் சாகிப் கடைசியில் கூட்டத்தில் கலந்துகொண்டார். எப்பொழுதும் போல் தன்னுடைய பெருந்தன்மையால் கூட்டத்தை சிறப்புறச் செய்ததுடன் ஐக்கிய முன்னேற்ற வேலைகளுக்காக இரண்டாயிரம் ரூபாய் நன்கொடையும் அளித்தார்.

எல்லைப்புர வாசியான செஞ்சட்டைப் படையினரைச் சேர்ந்த ஹக்கீம் பஸ்லுர் ரஹ்மான் சாகிப் பேசுகையில் காஷ்மீரைத் தாக்கும் மலை ஜாதியினர் பல இடங்களில் பாகிஸ்தானின் இரண்டு மூன்று ஜில்லாக்களைத் தாண்டி வருவது தனக்கு நன்ருய்த் தெரியுமென்றும், அவர்களால் மூன்று லக்ஷம் ஹிந்து முஸ்லிம்கள் கொல்லப்பட்டு இருக்கின்றனர் என்றும், இரவு பகலாய் லாரிகளில் ஒலிபெருக்கியை வைத்துக் கொண்டு பாகிஸ்தானிகள் 'ஜிஹாத்' கூப்பாடுபோட்டு வருகையில் படையெடுப்பாளருக்கு பாகிஸ்தான் எவ்வித உதவியும் செய்யவில்லை. என்று பச்சையாக பொய் சொல்லப்படுவது ஆச்சரியமாக இருக்கிறதென்றும் சொன்னர்.

கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. இக்கூட்டம் இந்தியத்தந்தை மகாத்மாஜிக்கு மனப்பூர்வமான வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் இந்தியாவின் பல்வேறு சமூகத்தினரும் ஒற்றுமையுடன் முன்னேற இக்காலத்திய மிகப் பெரிய மஹான் அடைந்த மரணத்தை கௌரவித்து நடத்தும்படியாக முஸல்மான்களை கேட்டுக்கொள்கிறது.

2. 1200-வருஷங்களாக சகோதரர்களாக வாழ்ந்துவரும் ஹிந்து-முஸ்லிம்கள் கடந்த 200 வருஷமாக இந்திய சுதந்திரத்திற்காக சிந்திய ரத்தத்தை கௌரவித்து ஒவ்வொரு ஹிந்து, முஸ்லிம் பிரஜையும் சமாதானம், சகிப்புத்தன்மையுடன் நடக்க வேண்டுமென் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

3. முஸ்லிம் லீகை கலைப்பதன்மூலம் பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்தி முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து இந்திய சுதந்திரத்தை பயமுறுத்திக் கொண்டிருக்கும் பிற்போக்கு சக்திகளை எதிர்த்து முறியடித்து மதஅடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியை நிறுவ முயற்சிக்கும் காங்கிரஸை பலப்படுத்துமாறு இக்கூட்டம் முஸ்லிம்களை கேட்டுக்கொள்கிறது.

4. பாலஸ்தீன பிரிவினை திட்டத்தை வன்மையாக கண்டிப்பதுடன் ஐரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகள் ஆசியாவை நாசம் செய்யும் முயற்சிகளிலிருந்து ஆசியா கண்டத்தை காப்பாற்ற ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் உடனடியாக பாலஸ்தீன பிரிவினை திட்டத்தை கைவிடும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

5. ஹிந்து சகோதரர்களிடம் நம்பிக்கை கொள்ளும்படியும்மாகாணத்தில் சிலபாகங்களில்தேசபற்றற்ற சில சம்பவங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்துவிட்டதை மறந்துவிடும்படி முஸ்லிம்களை கேட்டுக்

(11-ம் பக்கம் பார்க்க.)

அன்பர் கடிதம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

"ஆஸாத்" வாரச் சஞ்சிகையின் பிரதிகளைச் சற்று தாமதத்துடன் பார்க்கும்படி நேர்ந்ததைக் குறித்து வருந்துகிறேன். எனினும் விஷயதானங்கள் சகல அம்சங்களிலும் உயரியதாய் இருப்பதைக் கண்டு அகமகிழ்கின்றேன்.

உண்மையில் இது காலை பத்திரிகைகளின் பெருக்கத்தைக் கண்டு மனம் நோவுகின்றது. பத்திரிகா தர்மம் எவ்வளவு தூரம் ஞாபகத்தில் இருக்கிறதோ, அல்லது எவ்வளவுதூரம் பேசப்படுகிறதோ அத்துணை ஆசிரியர்களின் அனுஷ்டானத்தில் அஃது காணப்படவில்லை எழுத்துக்களை விறுவிறுப்பான முறையில் தீட்டவே அவர்களுடைய பேனா, முனைகின்றதேயொழிய, அவ்வெழுத்துக்களின் எதிர்கால விபரீத விளைவுகள், அவர்களுக்கு ஞாபகத்தில் வருவதில்லை, சமீபகால, நமது நாட்டின் வகுப்புக் கலவரங்களே, இதற்குப் போதிய சான்றாகும். இந்நிலையில் வெளிவரும் "ஆஸாத்" பத்திரிகை யுவருக்கு, ஓர் முன் வழிகாட்டியாய் விளங்க வேண்டுமென்பதே, எனது பேரவா!

இரண்டாவதாக உருது பாஷையில் அதிக் பாண்டித்தியம் பெற்ற தங்களை, ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இந்தப்பத்திரிகை, தமிழ் பத்திரிகை யுலகத்தில் ஓர் விசேஷ இடம்பெறும் என்பதிலும் ஐயமில்லை. பொதுவாகவே ஆங்கிலச் செய்தித் திரட்டுகளிலிருந்தும் ஆங்கிலத்தை மொழி பெயர்த்துக் கொள்வதிலிருந்துமே, தமிழகம் அரசியல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறது. சில சமயங்களிலோ, கூறவேண்டியதில்லை! ஆங்கிலபாஷை, தமிழ் மொழி பெயர்ப்பில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும்போது! அச்சமயங்களில் அரசியல் வாதிகளினிடையே ஒரு பக்கம் ஆச்சரியமும் கோபமும், துக்கமும், வெட்கமும், மற்றொருபக்கம் ஆனந்தமும் பெருமையும், உற்சாகமும், ஏற்படுவதை பிரத்தியட்சமாகக் காணலாம். விஷயங்களைத் திருத்திக்கூறும் பேனாவின் திருவிளையாடல்களே இவையெல்லாம்.

எனவே வடநாட்டில் உருதுவில் கையாளப்படும் விஷயங்கள் உள்ளது உள்ளபடியே தமிழ் நாட்டில் பரப்பப்படுவதற்கு, 'ஆஸாத்' ஓர் சிறந்த கருவியாக அமையும். நிற்க முஸ்லிம்களுடைய அரசியல் உலகிலே, மலிந்து கிடக்கும் பெருங்குறையையும், இஃது நிவர்த்திக்க ஹேது உண்டு. இதற்கு முதற்காரணம் என்னவெனில், இச்சஞ்சிகை பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னரும், குறிப்பாக இந்தியாவின் தந்தையும், முஸ்லிம்களின் மதிக்கமுடியாத நண்பருமான மஹாத்மா காந்திஜீயின் மறைவுக்குப் பின்னும், இஃது வெளியிடப்படுவதால், தங்களுடைய எதிர்கால வாழ்வைப்பற்றி சுயமாகநன்கு சிந்தித்துக்கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகம், தங்களுடைய வழிகாட்டிகளை நன்கு பொறுக்கி எடுப்பதற்கு, மிகவும் துணையாயிருக்கும். ஒரு காலத்தில் பாகிஸ்தான் போராட்டத்திற்காக, தியாக அக்கினியில் குதிக்கப் படையைத் திரட்டிக் கொண்டிருந்த இந்திய முஸ்லிம் லீக் தலைவர்களே, இன்று தங்கள் அரசியல் வாழ்வுக்கு என்ன அஸ்திவாரத்தைப் போட்டிருக்கிறார்கள் என்பதும் இந்தச் சஞ்சிகையின் வாயிலாக வெளிவர ஹேது உண்டு.

இரண்டாவது காரணம் யாதொரு சந்தேகமின்றி அபிப்பிராய பேதமின்றி இந்து சகோதரர்களுடன் தோளோடு தோளாக நின்று சுதந்திரப் போரில் ஈடுபட்ட தேசிய முஸ்லிம்களுடைய பேரொலியாக "ஆஸாத்" முழங்கிக் கொண்டிருக்கப் போவதால், முஸ்லிம்களுடைய, எதிர்கால உரிமைகளுக்கும், அந்தஸ்துகளுக்கும்,யாதொரு பாகுபாடின்றிஎல்லோரும், ஓர்குலம். எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற ரீதியில் அமையப்பெறுவதற்கு தனது முழுசக்தியையும், செல்வாக்கையும் உபயோகித்து, தேவைப்பட்டால், அன்பும், அஹிம்சையும் கலந்த "போரையும்" புரிந்து நிகரற்றசேவை செய்யும் என்ற திடநம்பிக்கை எனக்குண்டு. எனவே, ஆஸாத் இந்தியாவில், ஆஸாதாகத் தோன்றியிருக்கும், "ஆஸாத்" யாதொரு தயை தாட்சண்யமுமின்றி தன்னுடைய கருத்துகளை "ஆஸாதாக" வெளியிட ஆண்டவன் அருள்பாலிப்பானாக!

தங்களன்புள்ள,

எஸ். ஸையத் இஸ்மாயீல்,

3—3—48. மதுரை.

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொள்வதுடன் சர்க்கார் உடனடியாக எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகளுக்காக சர்க்காரையும் உள்நாட்டு மந்திரியையும் இக்கூட்டம் பாராட்டுகின்றது.

6. ஹைதராபாத் முஸ்லிம்களையும், ஹைதராபாத் நிஜாம் அவர்களையும் இந்திய யூனியனுடன் சேரும்படி கேட்டுக் கொள்வதுடன் அதனால் முற்போக்கு சக்திகளும், இந்தியடொமினியன் முஸ்லிம்களும் பலம் பெறுவதுடன் மத அடிப்படையற்ற ஜனநாயகஆட்சி இந்தியாவில் அமைக்கப்படுவதற்கு உதவி செய்யவும் முடியுமென்று இக்கூட்டம் நம்புகிறது.

7. காஷ்மீரைத் தாக்கி நாசத்தை விளைவிக்கும் கொள்ளைக் கூட்டத்தினரையும் அவர்களுக்கு பாகிஸ்தான் உதவி செய்வதையும் வன்மையாக கண்டிப்பதுடன் காஷ்மீர் இணைப்பு விஷயத்தை ஜனநாயக முறையில் பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் தீர்க்க முன் வரும்படி பாகிஸ்தான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

மாகாணம் முழுவதிலிருந்தும் பிரதிகள் வந்திருந்தனர். வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

அமைதி நிலவ வழியா?

வல்லரசுகளின் விசித்திரப் போக்கு

சமாதானம், அமைதியின் பெயரால் உலகம் யுத்தத்தை நோக்கி முன்னேறுகிறது. எங்கு பார்த்தாலும் பலப் பரீக்ஷை. ஒருபுறம் அமெரிக்கா, மற்றொரு புறம் ரஷ்யா பகீரதப் பிரயத்தனங்கள் செய்வதில் முனைந்திருக்கின்றன. ஒன்றையொன்று தோற்கடிக்க இதர நாடுகளை ஆயுதமாக உபயோகிக்கின்றன. கிரீஸில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்துவிடாமல் தடுப்பதற்காக, கிரீஸுக்கு அமெரிக்கா அளித்த உதவியும் அதன் அந்தரங்க நோக்கத்தைக் குறிக்கிறது. ரஷ்யப் பாதையில் முட்டுக்கட்டை போட துருக்கிக்கு உதவி அளிக்கப்பட்டது. ரஷ்ய எல்லையை கண்காணிக்க ஈரானுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. பாலஸ்தீன பிரிவினை திட்டமும் இதே நோக்கத்துடன் வகுக்கப்பட்டுள்ளது பிரான்ஸில் கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகளின் அரண், டாலர் பலத்தினுல் தகர்க்கப்பட்டுவிட்டது. இத்தாலியில் நடப்பதும் அதுதான். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் ஹாலந்து, லக்ஜம்பெர்கென் இவைகளை ஒரு யூனியனுக ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. பொங்கிவரும் கம்யூனிஸ்ட் பெருவெள்ளம் மேற்கு ஐரோப்பாவை அடித்துக்கொண்டுபோகாமல் தடுப்பதே அதன் நோக்கம். அந்த வெள்ளம் மேற்கூறிய நாடுகளை சமீபித்துக்கொண்டிருக்கிறது ஸெக்கோஸ்லோவேகியாவில் நடந்தேறிய அமைதியான புரட்சியால் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், குறிப்பாக பிரிட்டனுக்கும் ஆபத்து அதிகரித்துவிட்டது இன்னொரு புறம் பின்லண்டுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நடக்கும் ராணுவ ஒப்பந்த பேச்சு வார்த்தைகள், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் மேலும் கவலையை உண்டாக்கிவிட்டது. பின்லண்டு ரஷ்ய ராணுவ ஆதிக்கத்தின்கீழ் வந்துவிட்டபிறகு ஸ்வீடன், நார்வேயில் ரஷ்யா நுழைவதைத் தடுக்கமுடியாமல் போகலாம். அமெரிக்காவுக்கு எங்கும் ஆபத்து. அமெரிக்காவின் எல்லைகள் பத்திரமாக இருப்பினும் துரதிர்ஷ்டவசமாக அதன் எல்லைகள் அமெரிக்காவுடன்மட்டும் இருக்கவில்லை.

ஒருபுறம் சைனவையும், ஜப்பானையும் தன்னுடைய எல்லைகளாகவும், இன்னொரு புறம் பின்லண்ட், செக்கோஸ்லோவேகியா, துருக்கி, ஈரான், இத்தாலி, பிரான்ஸ் முதலியநாடுகளை முதலாளித்துவ பேராசைக் கண் கொண்டும் பார்க்கிறது எனவே அமெரிக்காவுக்கு ஆபத்தைத் தவிர வேறொன்றும் தென்படவில்லை. செக்கோஸ்லோவேகியா, பின்லண்டு நிலைமை மாறுதல் அடைய ஆரம்பித்தவுடன் அமெரிக்க அரசியல் வாதிகள் யுத்த அபாயம் நெருங்கிவிட்டதென்றும், ஜனநாயகம், அமைதிக்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், கூப்பாடு போட ஆரம்பித்துவிட்டனர். இதே அமெரிக்கா, சைனவில் உள்நாட்டுப் போர் மூட்டிவிடும்போதும், ஈரானில் சூழ்ச்சிகள் செய்யும்போதும், துருக்கி ரஷ்ய எல்லையில் கர்ஜிக்கும் போதும் அமைதிக்கோ, ஜனநாயகத்திற்கோ ஆபத்து ஒன்றும் ஏற்படுவதில்லை. ரஷ்யாவை முறியடிப்பதையே அமெரிக்கா அமைதி நிலவ வழியென்று நினைக்கின்றதுபோலும்.

ஏனெனில் அதற்குப் பிறகு உலகத்தின் மீது தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவது சாத்தியமாகும் ஆனல் ரஷ்யா சம்மந்தப்பட்டவரையில் அமெரிக்காவின் கனவு நினைவாகப் போவதில்லை. அமெரிக்கா விரும்பினல் யுத்தம் செய்யலாம். துரதிர்ஷ்டவசமாக அதை யாரும் தடுக்க முடியாது. டாலர் பலத்தினல் சில தேசங்களின் வாயடைக்க அதனல் முடியும். எனினும் ராணுவ உதவி அதற்கு செய்பவர்கள் யார் இருக்கிறர்கள்? இங்கிலையில் யுத்தம் இல்லாமலேயே பலப்போராட்டம் தீவிரமாய் நடந்துகொண்டிருக்கிறது. ரஷ்யா பலமடைவதால் பிரிட்டனுக்கு நஷ்டம் ஏற்படுமாகையால் அதுவும் பயப்படுகின்றது. உதவி செய்வதற்கு பதில் எஞ்சியிருக்கும் கொஞ்ச நஞ்ச பிரிட்டனுடைய அந்தஸ்தையும் அமெரிக்கா குலைத்து வருகின்றது. தென் அமெரிக்காவில் உள்ள பிரிட்டனின் சிறிய காலனிகளை அமெரிக்கா கவளீகரம் செய்து வருவதுடன், ஐரோப்பாவின் இதர ராணுவ சக்திகளுடன் சேரும்படி பிரிட்டனை நிர்ப்பந்தித்தும் வருகின்றது. ஆகவே அமெரிக்கா பெரிய வல்லரசாக மாறி ரஷ்யாவுடன் மோத முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

அந்தோ! மறைந்தார் மகாத்மா.

K. M. ஷேக்பீர் முஹம்மது, கல்லிடைகுறிச்சி.

இந்தியாவின் எழிற்றவப் புதல்வர், இந்தியர் தந்தை, இந்தியாவிற்றோன்றி இவ்வுலகமெங்குமே பிரகாசித்த இணையிலா ஜோதி மகாத்மாஜி இம் மானிலத்தை நீத்தது இந்தியாவிற்கு, ஏன்? இவ்வுலகிற்கே ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமாகி விட்டது. காந்திஜீயை இழந்த இந்தியா, தன் மகா ஆத்மாவையே இழந்தது போலாகிவிட்டது.

அவனியிலே அநீதி தலை எடுத்து அணுகுண்டு சகாப்தம் ஆரம்பமாகி அழிவுக்கு வழி கோலப் போகின்றது அதனின்றும் அகிலத்தை உய்விக்க அஹிம்சையினாற்றான் முடியும் என்பதை, அம்புவியோர்க்குணர்த்துதற்கென்றே அண்ணல் காந்திஜீ தோன்றினார் போலும்! அணுகுண்டால் சாதிக்க முடியாததை அஹிம்சையால் சாதிக்க முடியும் என்பதை, ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமலும், சிந்த வைக்காமலும் இந்தியா சுதந்திரமெய்த செய்ததின் மூலமும்; அரசாங்க சட்டத்தாலும், பயங்கர பலாத்கார ஆயுத பிரயோக அடக்குமுறைகளாலும் பல மாதங்களாக அடக்க முடியாமற் போன வகுப்பு கலவரங்களை உண்ணாவிரதமிருந்து சின்னாட்களில் அடங்கும்படி செய்ததின் மூலமும் மகாத்மாஜீ மகிதலத்திற்கு காட்டிவிட்டார்.

சுயநலம் துறந்து, பயமெலாம் மறந்து, அன்பு, அஹிம்சை, சாந்தம் சகிப்புத்தன்மை, உண்மை, ஒழுக்கம் முதலியவைகளில் சிறந்து; பாட்டாளி மக்கள் பயனடையவும், ஏழைகள் ஈடேறவும், தாழ்த்தப்பட்டோர் தலைதூக்கவும், வேற்றுமை நீங்கவும், ஒற்றுமை ஓங்கவும், துன்பம் நீங்கவும், இன்பம் தேங்கவும், சமத்துவம், சகோதரத்வம் உலவவும், அன்பு, அமைதி நிலவவும், குடியும், கொலையும் தொலையவும்; இந்தியா சுதந்திர மெய்தவும், ஏற்பட்ட இன்னல்களையும் பொருட்படுத்தாமல் இரவும், பகலும் இடையறாது உண்மையோடும், உறுதியோடும் உழைத்த உயரிய பெரியார் மகாத்மாஜீ.

இத்தகைய உத்தமர் இந்தியாவில் தோன்றியது இந்தியாவிற்கே ஒரு தனிப்பெருமையாகும். அவர் காலத்திலே, அவர் வாழ்ந்த தேசத்திலே நாமும் வாழ்ந்தோம் என்பது நாமும் பெருமைபடக் கூடியதாக இருக்கிறது. பிறந்தவர் யாவரும் இறப்பது இயற்கையே. என்றாலும் மகாத்மாஜீ இன்னும் சில ஆண்டுகள் இருந்திருந்தால் மக்கள் எவ்வளவோ நலன்களையெய்த ஏதுவாக இருக்கும். இவைகளை எல்லாம் எண்ணினால் எவர் இதயம்தான் இன்னலுறாதிருக்க முடியும். இதற்கு முன் இத்தரணியின் கண் எத்தனையோ உத்தமர்கள் உதித்தார்கள். உறைந்தார்கள், உபதேசம் செய்தார்கள், மறைந்தார்கள். அவர்கள் மறைவுக்கு அவர்களைப் பின்பற்றியவர்கள் மட்டுமேதான் துக்கம் கொண்டாடினார்கள் ஆனால் நம் காந்திஜீ மறைவுக்கோ அகில மெங்கும் ஆற்றொணாத் துயரத்தி லாழ்ந்திருக்கின்றது. இம் மகானின் மறைவால் இப்பூதலம் ஈடு செய்யமுடியாத நஷ்டத்தை எய்திவிட்டது என்பதை ஒவ்வொருவர் உள்ளமும் உணருகின்றது. இவைகளுக்குக் காரணம் இதற்குமுன் தோன்றிய பெரியார்கள் அத்தனை பேர்களும் போதித்தவைகளை இவர் சாதித்துக் காட்டியதே யாகும்.

மகாத்மாஜி மண்ணுலகினின்று மறைந்தாலும் மக்கள் மனதினின்றும் மறையவில்லை. எல்லோர் இதயத்திலும் இடம் பெற்றிருக்கின்றார். காந்திஜீயின் ஆத்மா இவ்வுலகம் உள்ளவரையும் மங்கா ஜோதியாய் மக்கள் மனங்களில் ஊடுருவி ஒளிசெய்து அறிவுச் சுடர் வீசும் என்பது நிச்சயம்.

மகாத்மாஜியை ஒரு படித்த வகுப்புவாதி கொன்றதிலிருந்து, "வகுப்பு பேத மனப்பான்மை கொண்டவனும் எவ்வளவு படித்தாலும் விசாலமான அறிவு உடையவனாக மாட்டான்; குறுகிய மனப்பான்மையோடு, எத்தகைய கீழ்த்தரமான செயல்களையும் புரிய தயங்கமாட்டான்; ஆகவே எந்த தேசம் வகுப்புவாதிகளை கொண்டதாயிருக்கின்றதோ, வகுப்புவாதங்களை பரவ விடுகின்றதோ, வகுப்புவாத சபைகளுக்கு இடமளிக்கின்றதோ அந்த நாடு ஒருபோதும் ஒற்றுமையாயிராது; முன்னேற்றமடையாது" என்பது தெளிவாகியிருக்கின்றது. இந்த நாடு உயரவேண்டுமானால் வகுப்பு வாதம் மறைந்துதான் ஆகவேண்டும். அதற்காக மக்கள் மகாத்மாஜி காட்டிய வழியில் பாடுபடவேண்டும். மகாத்மாஜி மடிந்ததின் காரணமாகத்தான் நம் அரசாங்கம் வகுப்புவாதத்தை இங்கில்லாது ஒழித்துக்கட்ட முன் வந்திருக்கிறது. மக்களில் பெரும்பாலானோரும் வகுப்பு பேதம் மறையத்தான் வேண்டும் என்ற மனப்பூர்வமான முடிவுக்கு வந்து சர்க்காரின் செயலை ஆதரித்து நிற்கின்றனர். இந்தியாவிற்கு உயிருடனிருந்து சேவை செய்த காந்திஜி

இறந்த பின்னரும் வகுப்புவாதம் மறைய இந் நாட்டிற்குச் சேவை செய்து வருகிறார். இத்தகைய தியாக சிரோண்மணிக்கு நாம் எத்தகைய மரியாதை செய்யினும் கொஞ்சமும் ஈடாகாது. நம் பிதா காந்திஜீமீது நாம் உண்மையாக மரியாதை வைத்திருக் கிறோமென்றால் அவர் கடைப்பிடித்துக் காட்டிச் சென்றவைகளை கைக்கொண்டொழுக வேண்டும். போதித்துவிட்டுச் சென்றவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இவையேதான் மகாத்மாவுக்கு ஆறுத லளிக்க நாம் எழுப்பும் சிறந்த ஞாபகச் சின்னங்க ளாகும். இவ்வித செயல்களால்தான் நாம் எய்திய சுதந்திரத்தை நிரந்தரமாக நிலைக்கச் செய்யவும் முடியும்.

சுய நலத்தின் காரணமாக விழித்திருந்தும் தூங்கும் பாவனையில், உண்மைக்கு விரோதமாக பிரசாரம் செய்த முஸ்லிம் லீக் தலைவர்களின் பசப்பு மொழிகளில் அறியாமையால் மயங்கிய முஸ்லிம்கள், காந்திஜியின் அருமை பெருமைகளையும், அம்மஹானால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் மகாசபையின் நேர்மை யையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். லீகில் ஈடுபட்டு காந்திஜீயையும் காங்கிரசையும் ஏசிப்பேசி தூஷித்தனர். மகாத்மாஜீ மறைந்த பிறகேனும் பல முஸ்லிம்கள் ஒருவாறு உண்மையை உணர்ந்து அனு தாபம் தெரிவித்ததும், அவர் ஆத்மா சாந்தியுற பிரார்த் தனை செய்ததும், லீகை விட்டு விலகி காங்கிரசில் சேர்ந்து வருவதும் மனதிற்கு ஆறுதலையும் மகிழ்ச்சி யையும் அளிக்கின்றது. இன்னும் பல லீகர்கள் அந்தகாரத்தினின்றும் அகன்றபாடில்லை. இந்தியாவை பாகிஸ்தான் கைபற்றி, இந்தியா பூராவையும் பாகிஸ் தானோடு சேர்த்துவிடும் என்று இன்னமும் பகற்கனவு கண்டு கொண்டிருக்கின்றனர் இவர்கள், மகாத்மாஜீ முஸ்லிம்களின் நலனுக்காகவே எதிர்ப்புகளினூடே உழைத்து, அதற்காகவே தனது ஆருயிரையும் அர்ப்பணம் செய்திருப்பதையும் சிந்தித்தால், அறி யாமையெனும் இருளினின்றும் அகன்று வெளிவந்து உண்மையை உணரமுடியும். முஸ்லிம்களின் பொருட்டே உயிர்நீத்த மகாத்மாஜிக்கு மரியாதை காட்டும்பொருட்டேனும் லீகிலிருக்கும் ஏனைய முஸ் லிம்களும் இந்திய மக்களை பல இன்னல்களுக்குள் ளாக்கிய வகுப்புவாத லீகைக் கைவிட்டு, காங்கிரசில் சேர்ந்து விஸ்வாசத்துடன் 'இந்தியர் அனைவரும் ஓரினம்' என்ற மனப்பான்மையுடன் இந்நாடு இன்ப மடைய உழைக்க முன்வருவார்களாக!

ஜெய்ஹிந்த்! வாழ்க மஹாத்மா!!

(புனர் வாழ்க்கை 16-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண பொறுப்பாட்சியுடன் மத்திய சர்க்கா ரில் சரிசமப் பிரதிநிதித்வம் கிடைத்த பிறகு ஹிந்து மெஜாரிடி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று நாம் இதற்கு முன்னே விளக்கியுள்ளோம். ஆனால் இன்று இந்திய முஸல்மான்களின் சக்தி, பலம் பாதியாக குறைந்துவிட்டது. இரண்டே முக்கால் கோடி முஸ்லீம்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்று கை கூசாமல் எழுதும் இதே பத்திரிகை பத்து கோடி முஸ்லிம்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியாது என்று வாய் கூசாமல் சொல்லிக்கொண் டிருந்த காலமும் ஒன்று உண்டு. மாபெரும் சமூகம் ஒன்றை இம்மாதிரி முட்டாள்களாக்கியதற்கு நிகரான தொரு மோசடி இதுவரை உலகம் கண்டதேயில்லை.

லீக் லீடர்களின் மாயவலையில் சிக்குவதற்கு முன் மைனாரிடி முஸ்லிம்கள் மெஜாரிடி ஹிந்துக்கள் மீது என்றுமே அவநம்பிக்கை கொண்டதில்லை. பொய், பித்தலாட்டம், பொறாமை, புனைசுருட்டினால் வேற்றுமை உண்டாக்கி மைனாரிடி முஸ்லிம்களின் மனதைக் கெடுத்து, இரண்டு சமுதாயம் என்ற நூதன கொள்கையைப் புகுத்தி, ஹிந்து சகோதரர் களை சந்தேகிக்கும்படி லீக் லீடர்கள் செய்துவிட்ட னர். முடிவில் ஹிந்துக்களுடன் சேர்ந்து வாழும் நிலைமையில் கைவிட்டுச் செல்லக்கூடியவர்கள், முத லில் மனக் கசப்பையும், வேற்றுமையையும் எதற்காக வளர்க்கவேண்டுமென்பதுதான் கேள்வி.

இன்று வெட்கமில்லாமல் ஹிந்துக்களுடன் சேர்ந்து வாழும்படி யோஜனை சொல்லப்படுகிறது. அன்று விரோதிகளாக இருந்த ஹிந்துக்கள், இன்று நண்பர்களாக எப்படி மாறிவிட்டனர் என்று லீக் லீடர்களைக் கேட்காமலிருக்க முடியாது.

(தொடரும்)

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய

"ஆஸாத்"

அவசியம் படிக்கவேண்டும்.

சென்ற வாரத் தொடர்ச்சி.

—: புனர் வாழ்க்கை. :—

(o)

இரும்பு நிலக்கரி முதலிய அத்தியாவசிய மூலப் பொருள்களின் இன்மையால் பாகிஸ்தான் தொழிலியலில் முன்னேற்றமடைவது சாத்தியமே யில்லை. இன்றைக்கும் நிலக்கரியை இந்தியா கொடுக்க மறுத்துவிட்டால் பாகிஸ்தானில் ஓடிக் கொண்டிருக்கும் ரயில்கள் அங்கங்கே நின்றுவிடும். இந்நிலையில் தொழிற்சாலைகள் எவ்வாறு நடக்கமுடியும். சிந்து, பலுஜிஸ்தான் பிரதேசத்தில் நிலக்கரி இருப்பதாக சமீபத்தில் 'டான்' பத்திரிகையில் செய்தி வெளியாயிற்று. அப்படியே ஒருக்கால் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அதனால் பிரச்னை தீர்ந்துவிட முடியாது.

பூமியிலிருந்து நிலக்கரி எடுப்பதற்கு மூலதனம் வேண்டும். சிந்துவில் ஹிந்துக்களின் கட்டிடங்களை ஆக்ரமித்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுக்க சர்க்கார் கஜானவில் பணம் இல்லை என்று சொல்லிவிட்டதைப் போல் பூமியிடம் சொல்லிவிட்டு நிலக்கரியை வெட்டி யெடுத்துவிடமுடியாது,

ஆப்கானிஸ்தானில் ஏராளமான நிலக்கரி இருப்பதைக் கண்டுபிடித்து நீண்டகாலமாய்விட்டது. அதையெடுப்பதற்கு சர்க்காரிடம் மூலதனம் இல்லாததால் இதுவரை நிலக்கரி எடுக்க முடியாமலேயே இருந்துவருகிறது.

ஈராக், ஈரான் இரண்டிலும் ஏராளமாக பெட்ரோல் உண்டு. இருந்தும் அந்த நாடுகளுக்கு பிரயோஜனமில்லை. அதைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளமுடியாமல் போனதற்கு மூலதனமின்மையே காரணம். அமெரிக்கர்கள் மூலதனத்தைப் போட்டு, ஈராக், ஈரானில் லாபம் அடைந்துவருகின்றனர். அரேபியாவிலும் ஏராளமான பெட்ரோல் உண்டு. அரேபிய அரசாங்கத்தினிடம் அதை எடுப்பதற்குப் பணமில்லை. அதனால் தினம் 1½-லக்ஷ ரூபாய் குத்தகைக்கு அமெரிக்கர்களுக்கு விடவேண்டி ஏற்பட்டது.

பாகிஸ்தானில் நிலக்கரி இருப்பதாக சொல்லப்படுவது உண்மையாக இருப்பினும் அந்நிய நாட்டு மூலதன உதவியின்றி பாகிஸ்தான் ஒன்றும் செய்துவிடமுடியாது. அன்னிய பொருளாதார ஆதிக்கம் இருக்கையில் அரசியல் சுதந்திரம் அர்த்தமற்றதாக ஆகிவிடும்.

பிரிவினைக்குப் பிறகு சில கேந்திர ஸ்தானங்கள் பாகிஸ்தானுக்குக் கிடைத்திருப்பதாகவும், அதனால் உலக நாடுகள் பாகிஸ்தான் தயவை எதிர்பார்த்திருக்கு மென்றும் மிஸ்டர் ஜின்னு வெளியிட்டார். கேந்திர ஸ்தானங்கள் இருப்பது என்னமோ உண்மைதான். கேந்திர ஸ்தானங்களைப் பாதுகாக்க சக்தியில்லாத, அந்நிய பொருளாதார உதவியை நாடியிருக்கக்கூடிய ஒரு தேசத்தினிடம் கேந்திர ஸ்தானங்கள் இருப்பதால் அனுகூலத்தைவிட பிரதிகூலமே ஏற்படும். பிச்சைக்காரி ஒருத்திக்கு அழகும், யௌவனமும் நன்மை பயக்கமுடியாது.

துருக்கியிடம் டார்டனல்ஸ், எகிப்தினிடம் சூயஸ் கால்வாய் இருக்கின்றன. பூகோள ரீதியாக பாலஸ்தினம் ஒரு கேந்திர ஸ்தானமாக அமைந்திருக்கின்றது. இந்த கேந்திர ஸ்தானங்கள்மீது அந்த நாடுகளின் ஆதிக்கமில்லை. அதுமட்டுமின்றி இந்த கேந்திர ஸ்தானங்களே அந்த நாடுகளுக்கு ஆபத்தாய் இருந்துவருகின்றன இவ்வித கேந்திர ஸ்தானங்கள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அந்த நாடுகள் நிம்மதியாக இருந்திருக்கமுடியும்.

இவைகளில் துருக்கி ஒன்று மட்டுந்தான் டார்டனல்ஸை வைத்துக்கொண்டு சமாளித்து வருகின்றது. துருக்கியிடம் டார்டனல்ஸ் இருப்பதால் துருக்கிமீது நடந்த படையெடுப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. டார்டனல்ஸ்மீது ஒருபுறம் ரஷ்யா கண்ணேட்டம் வைத்திருக்கின்றது. இன்னொருபுறம் பிரிட்டிஷ், அமெரிக்கர்களின் வாயில் ஜலம் ஊறுகின்றது. நிலைமையைப் பார்த்தால் ஒன்றிரண்டு வருஷங்களில் துருக்கி டார்டனல்ஸுக்கு தாரை வார்த்துவிடுமோ என்றுகூட சந்தேகிக்காமல் இருப்பதற்கில்லை. ஒன்று ரஷ்யா அதை கவளீகரம் செய்யவேண்டும். அல்லது பிரிட்டிஷ், அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் விடப்படவேண்டும் பாதுகாக்க சக்தியற்ற துருக்கியிடம் இருக்கும் டார்டனல்ஸின் இன்றைய நிலைமை இதுதான். உண்மையில் இன்றைக்கும் டார்

டனல்ஸ் கிட்டத்தட்ட சர்வதேச பிரதேசமாகவே கருதப்படுகின்றது. இவ்வித நிலைமையை தருக்கியும் ஒப்புக்கொண்டுதான் இருக்கின்றது.

கைபர் கணவாய், கராச்சி துறைமுகம் இரண்டும் வல்லரசுகளுக்கு தேவையாக இருக்கின்றன. ரஷ்யாவுக்கு தெற்கு ஆசியாவில் ஒரு துறைமுகம் தேவை. நீண்ட நாட்களாகவே கராச்சியின் மேல் அதற்குக் கண்ணோட்டம் உண்டு. பிரிவினைக்குப் பிறகு முஸ்லிம்கள் கம்யூனிஸத்தை சுலபமாக ஏற்றுக்கொள்வார்கள். அதன் பிறகு கராச்சி துறைமுகம் சுலபமாக கிடைத்துவிடும் என்று நம்பியே ஆரம்பத்தில் ரஷ்யாவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் பாகிஸ்தானை ஆதரித்தனர். அவர்கள் நம்பியதற்கு மாறாக பாகிஸ்தான் ஆங்கிலேயர்களின் கீழ் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஏற்றுக்கொண்டுவிட்டது. நடக்கப்போகும் யுத்தத்தில் தங்களுக்கு எதிராக தளவாடங்களை இறக்கவும், எல்லைப்புறத்தை தளமாக உபயோகிக்கவும் பிரிட்டிஷ், அமெரிக்கர்கள் பிரயோஜனப்படுத்திக்கொள்ளமுடியுமென்று தெரிந்தவுடனே மாஸ்கோவும், இந்திய கம்யூனிஸ்டுகளும் பாகிஸ்தானை எதிர்த்து பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். பாகிஸ்தானைப்பற்றி எதிர் பிரசாரத்தில் இரண்டு அங்கங்களின் கணக்கு வழக்குகளையும், ஜனத்தொகையையும் ஒன்றாகச் சேர்த்து பேசப்படுவதே எல்லாவற்றையும்விட பெரிய பித்தலாட்டமாகும். இரண்டு பாகிஸ்தான் யூனிட்டுகளும் எல்லா அம்சங்களிலும் முற்றிலும் மாறுபட்டவை. ஒன்றுக்கொன்று எவ்விதத்தொடர்பும் அற்றவை. பரஸ்பரம் ஒத்துழைக்கவோ, உதவவோ முடியாத நிலைமையில் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பவை. பாதுகாப்பு விஷயத்தில் இரண்டுக்கும் தனித்தனி ராணுவங்கள் தேவை. முஸ்லிம் பிரதேசங்கள் என்ற அடிப்படையில் இரண்டையும் ஒன்றாக வைத்துப்பேசுவது புத்திசாலித்தனமற்ற பேச்சாகும். அப்படிப் பார்த்தால் உலக முஸ்லிம் நாடுகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு பாகிஸ்தான் உலகம் பூராவிலும் பெரிய நாடு என்று ஏன் சொல்லக்கூடாது. மயிரிழையில் பிணைக்கப்பட்டிருக்கும் வங்க, பஞ்சாப் தொடர்பு நீடித்திருக்கமுடியாது என்பதை வருங்காலம் வெகு சீக்கிரத்திலே முடிவு செய்யப் போகின்றது.

இதுபோன்ற இன்னும் அநேக தவறான விஷயங்களை முஸ்லிம் லீக் பத்திரிகைகள் பிரசுரித்து பாமர முஸ்லிம்களை தவறான நம்பிக்கையில் வைத்துக்கொண்டிருக்க முயற்சித்து வருகின்றன. பாகிஸ்தான் வாங்கியாய்விட்டது. இனியும் இல்லாததையெல்லாம் சொல்லி பாகிஸ்தான் வண்டவாளத்தை உள்ளது உள்ளபடியே முஸ்லிம்கள் தெரிந்துகொள்ளமுடியாமல் செய்யப்படுவதை கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. இஸ்லாமிய ஆட்சி என்று சொல்லப்படும் பாகிஸ்தான் லட்சணத்தை இன்று அநேக முஸ்லிம்கள் உணர்ந்துவிட்டனர். இன்னும் சில தினங்களில் எல்லோருமே உணரப் போகின்றனர்.

மைனாரிடி முஸ்லிம்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து பாகிஸ்தான் வாங்கிய லீக் லீடர்கள், மைனாரிடி முஸ்லிம்களை பாதுகாக்க தவறிவிட்டதன்றி தங்கள் போக்கினால் அவர்களுடைய வாழ்க்கைக்கு உலை வைத்துவிட்டதை பாமர முஸ்லிம் பொதுமக்கள் உணர்ந்து வருகின்றனர். கள்ளங்கபடமற்ற ஏழை முஸல்மான்களை முட்டாள்களாக்கும் வேலையை லீக் லீடர்களும் லீக் பத்திரிகைகளும் இனியும் தொடர்ந்து செய்து வந்தால் தேசிய முஸல்மான்களுக்கு செய்யப்பட்டதெல்லாம் பொதுமக்கள் அவர்களுக்கும் செய்ய தயங்கமாட்டார்களென்று எச்சரிக்க வேண்டியது கடமை.

மைனாரிடி முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானில் இடமில்லை. பாகிஸ்தான் சொர்க்கவாசிகளாக இருக்க அவர்கள் அருகதையற்றவர்கள். மெஜாரிடி பலத்துடன் எவ்வித பயமுமின்றி இருந்துவந்த முஸ்லிம் பிரதேசங்கள்தான் பாகிஸ்தானின் புண்ணிய பூமி.

இஸ்லாமிய விரோதிகள், அக்கிரமக்காரர்கள், முஸ்லிம்களை அடிமைகளாக்க முயற்சிக்கின்றவர்கள் என்றெல்லாம் லீக் தலைவர்கள் குறை கூறி வந்த மிருகத்தனமான ஹிந்து மெஜாரிடி என்று தங்கு தடையின்றி மிஸ்டர் ஜின்னா குறிப்பிட்ட அதே ஹிந்து மெஜாரிடியில் மைனாரிடி முஸ்லிம்கள் விடப்பட்டனர். இவ்வளவும் செய்துவிட்ட பிறகு............?

“$2\frac{3}{4}$ கோடி முஸ்லிம்கள் கட்டுப்பாடான முறையில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள உறுதியுடன் ஒன்றுபட்டு நின்றால் கண்டிப்பாய் அவர்கள் வெற்றி பெறமுடியும்” என்று லீக் பத்திரிகையான ‘மன்சூர்’ எழுதுகின்றது.

(14-ம் பக்கம் பார்க்க)

ஆர். ஜி.
தில்பஹார் ஹேராயில்

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.